மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்



மத்திய பிரதேசம் சிவபுரி மாவட்டத்தில் உள்ள ஊட்டச்சத்து மறுவாழ்வு மையத்தில் தன் அம்மாவுடன் இருக்கும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட 2 வயதுக் குழந்தை – Frontline, March 24, 2012.

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 62 - 2012

## கண்டறிந்தவைகளின் தொகுப்புகள்

# குழந்தைகள் உரிமைக்கான ஐ.நா. உடன்படிக்கையின் இருபது ஆண்டுகள் : ஒரு சீராய்வுத் தணிக்கை*

rPuha;Tj; jzpf;if mwpf;if Fwpj;J:

இந்தியா முழுவதும் குழந்தை உரிமைக்காகப் பணிபுரிந்து வரும் பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் டெல்லியைச் சேர்ந்த குழந்தை உரிமை நிறுவனமான "ஹக்" தலைமையில் Tdh நிறுவன உதவியுடன், தேசிய அளிவிலான ஒரு நிலைக்குழு அமைக்கப்பட்டு அக்குழுவில் தமிழகம் சார்பில் குழந்தை உரிமை முன்னேற்ற மையமும்-CCRD, மனிதஉரிமைஅமைப்பும்-HRF இணைந்து மேற்கொண்ட முயற்சியே இந்த அறிக்கை.

ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகளும் குழந்தைகள் குழுவும் இரண்டு வருடங்களுக்கு மேலாக இணைந்து பணியாற்றியதன் விளைவாகவே இந்த அறிக்கையைக்கொண்டுவர முடிந்தது. இந்திய சமூகப் பொருளாதார நிலையில் குழந்தை உரிமைக்கான உடன்படிக்கையின் சரத்துக்களை நமது நாட்டில் அமல்படுத்தியது குறித்து அரசு அளித்த அறிக்கைகள் இதில் ஈடுபட்ட அனைத்து தொண்டு நிறுவனங்களுக்கும் குழந்தை உரிமை நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டு அவர்கள் அளித்த கருத்துக்களும் ஆலோசனைகளும் இந்த வரைவு அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இது குறித்து கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள் இதுபோன்ற இன்னும் பல அமைப்புகளிடம் கலந்தாய்வு நடத்தப்பட்டு அவர்கள் அளித்த கருத்துக்களும் ஆலோசனைகளும் இந்த அறிக்கையில் இணைத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வரைவு அறிக்கை தயாரிப்பை குழந்தைகளிடம் கலைநிகழ்வுகள்,பொம்மலாட்ட நிகழ்வுகள் மூலம்வெளிப்படுத்தி அவர்கள் இந்த வரைவு அறிக்கையின் முக்கிய அம்சங்களை விவாதித்து அதன்பின் அவர்கள்தந்த ஆலோசனைகளும்எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த இறுதியான அறிக்கையானது தேசிய சர்வதேச அளவிலான தொண்டு நிறுவனங்களுக்கும் மற்ற கடமைப்பொறுப்பில் உள்ளவர்களுக்கும் அதாவது, அரசு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டது.

### ஏன் இந்த அறிக்கை (10 வருட தணிக்கை)

ஐ.நா.குழந்தை உரிமை உடன்படிக்கையை பல நாடுகளும் ஏற்றுக்கொண்ட இந்த 20 ஆண்டுகளில் புதிய பொருளாதார நிலை ஆதிக்கம் செலுத்தி வருவதன் ஊடாக அனைத்து துறைகளின் நிதி தலைமையகங்களில் புதிய பொருளாதார உலகமயம் என்பது ஊடுருவிவிட்டது. இந்த நிலையில் அரசு, சர்வதேச நிறுவனங்கள், சமூக அமைப்புகள், மக்கள் இயக்கங்கள் ஆகியன இணைந்து, இந்த குழந்தை உரிமை உடன்படிக்கையின் சரத்துக்கள் யாவற்றையும் நடைமுறைக்கு கொண்டுவர முயலவேண்டும். இந்த உடன்படிக்கை அமலுக்கு வந்து 20 ஆண்டுகள் கடந்தபின்னும் குழந்தைகளுக்கான உகந்த சூழலை உருவாக்க, இந்த உடன்படிக்கையின் செயல்பாடுகள் குறித்து மீளாய்வு செய்வதும், சீராய்வு செய்வதும் இன்றைய அவசியத் தேவையானது.

இந்த ஒட்டுமொத்த முயற்சியும், அரசுகள் மற்றும் பிறர் உள்ளிட்ட கடமைப்பட்ட அனைத்து பிரிவினரையும் குழந்தைகளின் உரிமைகளை அங்கீகரிக்கச் செய்யவே நடத்தப்பட்டது. சாதனைகளையும் முயற்சிகளையும் இந்த அறிக்கை அங்கீகரித்தாலும், குறைபாடுகளையும் பதிவு செய்கிறது. அரசாங்கம், பெற்றோர்கள், குடிமைச் சமூக அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து பிரிவினரும் "குழந்தைகளின் சிறந்த நலன்" என்பதை முழுமையாக உணர்ந்துகொள்ள இந்த அறிக்கை தூண்டுகோலாக அமையும் என்றும் நம்புகிறோம்.

அங்கீகரிக்கப்பட்ட குழந்தை உரிமைகள் என்பது, வாழ்வதற்கான, பாதுகாப்பான, வளர்ச்சிக்கான உரிமை மற்றும் பங்கேற்புக்கான உரிமை ஆகும். இந்த உரிமைகள் நிஜமாக வேண்டும் என்றால் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் பல்லுயிர்

* *22.3.2012 அன்று சென்னையில் நடைபெற்ற குழந்தை உரிமைக்கான உடன்படிக்கையின் (CRC) 20 ஆண்டுகள் சீராய்வுத் தணிக்கை அறிக்கை வெளியீடு நிகழ்ச்சியில் பத்திரிக்கையாளர்களுக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் வெளியிடப்பட்டது.*

சூழலும் தேவை. ஆனால், 1989ல் ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இந்த உரிமைகள் குறித்து தனியாகக் குறிப்பிடப்படவில்லை. கடந்த 20 ஆண்டுகளாக, சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ச்சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி அதிகரித்து வருகிறது. சில பன்னாட்டு உடன்படிக்கைகளிலும் இந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அதில் குழந்தைகள் இணைக்கப்படவில்லை. எனவே, குறிப்பாக குழந்தைகளுக்கான பாதுகாப்பான சுற்றுச்சூழல் மற்றும் நிலையான பல்லுயிர்ச் சூழலுக்கான உரிமைகள் பற்றி கோரிக்கை எழுகிறது. இது ஒரு புது கோரிக்கையாக குழந்தைகள் மற்றும் குழந்தை உரிமைகளுக்கான செயல்பாட்டாளர்களிடமிருந்து எழுகிறது.

## குழந்தைகள் உரிமைக்கான ஐ.நா.உடன்படிக்கை 1992ல் உருவாக்கப்பட்டதில் இருந்து நாம் என்ன பயனடைந்துள்ளோம் ?

- பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டுமேயான ஒரு தனி அமைச்சகம் 2006 ல் உருவாக்கப்பட்டது.
- குழந்தைகளுக்கான ஒரு தேசிய அளவிலான செயல்திட்டம் 2005ல் புதுப்பிக்கப்பட்டது.
- குழந்தைகளின் உரிமை என்பது இன்று 57 சட்டங்கள் மூலமாகவும், இந்திய தண்டனை சட்டம்,குற்றவியல் சட்டம்,இந்திய சாட்சிய சட்டம் ஆகியவற்றின் 60 சட்டபிரிவுகள் மூலமாகவும் கவனிக்கப்படுகின்றன. குழந்தைகளின் வாழ்க்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்பது கொள்கை ஆவணங்கள் உருவாகி உள்ளன. ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் அனேக குறிக்கோள்களும் இலக்குகளும் உருவாகி உள்ளன. ஒன்பது மத்திய அரசு அமைச்சகங்களிடமிருந்து மத்திய அரசால் நிதி ஒதுக்கப்பட்ட 73 திட்டங்கள் செயல்படுகின்றன. குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஒரு தேசிய ஆணையமும் 12 மாநிலங்களில் மாநில ஆணையங்களும் செயல்படுகின்றன.

## குழந்தைகள் உரிமைகளுக்கான ஐநா உடன்படிக்கை ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு சட்டரீதியான சீர்திருத்தங்களில் தீவிரமான மாற்றங்கள் நடந்துள்ளன.

- ஆறு வயது முதல் 14 வயது வரையான குழந்தைகளின் கல்வி உரிமை என்பது அடிப்படை உரிமையாக மாறி உள்ளது.
- குழந்தை பருவத்துக்கு முந்தைய பராமரிப்பு மற்றும் வளர்ச்சி என்பது அரசுக் கொள்கையின் வழிகாட்டு நெறியாக இந்திய அரசியல் சாசனத்தில் முதன்முறையாக இடம்பெற்றது.
- கருக்கொலைத் தடுப்புச் சட்டம் – கருவுறுவதற்கு முன்பே, பாலினத் தேர்வு செய்வதையும், தவறு செய்பவர்களை தீவிரமாக கண்காணிக்க, நடவடிக்கை எடுக்கும் வகையில் சில பிரிவுகளை உள்ளடக்கி கருவுறுதல் மற்றும் கருக்கொலைத் தடுப்புச் சட்டமாக திருத்தப்பட்டது.
- குழந்தைகளுக்கென தாய்ப்பால் மாற்று பால் பொருள்கள், பால் புட்டிகள், குழந்தை உணவு (உற்பத்தி மற்றும் விநியோக முறைப்படுத்தல்) சட்டம் 1992, திருத்தப்பட்டு குழந்தைகளுக்கான உணவு விளம்பரங்கள் வெளியிடத்தடை கொண்டுவரப்பட்டுள்ளது. அதை மீறுபவருக்கு தண்டனைகளும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.
- குழந்தை உழைப்பு தடை செய்யப்பட வேண்டிய அபாயகரமான தொழில்கள் மற்றும் துறைகளின் பட்டியலில் மேலும் பல சேர்க்கப்பட்டன. குறிப்பாக வீட்டு வேலைகள் மற்றும் உணவகங்களில் குழந்தை உழைப்பை தடை செய்யும் அறிவிக்கை 2006 அக்டோபர் 10 அன்று வெளியிடப்பட்டது.
- அச்சு மற்றும் டிஜிடல் வடிவில் குழந்தைகளை ஆபாசமாக, தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்காக தகவல் தொழில்நுட்ப சட்டம் 2008ம் ஆண்டு திருத்தப்பட்டது.
- குற்றவியல் சட்ட அமைப்பில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் ஆகியவற்றில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானவர்களை விசாரிக்கும் போதும் மருத்துவ பரிசோதனையின்போதும், வழக்கு விசாரணையின் போதும் பாதுகாப்பதற்காக கடைபிடிக்க வேண்டியவை குறித்து திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டன. நிறைய புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன.
- இந்திய மறுவாழ்வு கவுன்சில் சட்டம் 1992, குறைபாடுகள் உள்ள மனிதர்களுக்கான (சமவாய்ப்புகள்,பாதுகாப்பு உரிமைகள் மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995,மற்றும் மனநலம் உள்ளிட்ட பல்வேறு மனரீதியான குறைபாடுகளால் பாதிக்கப்பட்டோருக்கான நல்வாழ்வுக்கான தேசிய அறக்கட்டளை சட்டம்–1999 உள்ளிட்ட மாற்று திறனாளிகளுக்கான நிறைய சட்டங்கள் 1992–95 காலகட்டத்தில் நடைமுறைக்கு வந்தன.

- இளஞ்சிறார் நீதிக்கான புதிய சட்டம் 2000த்தில் முன்வைக்கப்பட்டது, அது குழந்தையின் நலன்களுக்கு பொருத்தமாகவும் சர்வதேச சட்டம் மற்றும் மறுவாழ்வு நீதிக்கான கோட்பாடுகளுக்குப் பொருந்துமாறும் 2006 ல் திருத்தப்பட்டது.

- மத்தியிலும் மாநிலங்களிலும் குழந்தைகளுக்கான ஆணையங்களை அமைப்பதற்கான குழந்தை உரிமைகளுக்கான தேசிய ஆணையத்துக்கான சட்டம் 2005 ல் இயற்றப்பட்டது.

- குழந்தைத் திருமணங்களை கட்டுப்படுத்துகிற நிலையில் இருந்து கடுமையான தண்டனைகளை வழங்கும் வகையில், முந்தைய குழந்தை திருமணச் சட்டத்திற்குப் பதிலாக குழந்தை திருமணங்கள் தடுப்பு சட்டம் 2006ல் கொண்டு வரப்பட்டது.

- குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009 ல் இயற்றப்பட்டது.

- கோவா குழந்தைகள் சட்டம் –2003 எனும் முழுமையான சட்டத்தை கோவா அரசாங்கம் உருவாக்கியது.

## நீதித்துறை கூட குழந்தை உரிமைகள் விஷயத்தில் மிகவும் துடிப்போடு செயல்பட்டது

- குழந்தை உரிமை உடன்படிக்கையை அமலாக்கும் வகையிலும் குழந்தைகளின் உரிமைகளை உயர்த்தி பிடிக்கும் வகையிலும் முற்போக்கான ஆணைகள் கீழ்கண்ட முக்கிய விஷயங்களில் வந்தன:

- பாதுகாவலர் – தாய் என்பவர் இயல்பாகவே ஒரு பாதுகாவலர்தான் என்பதை அங்கீகரித்தல்

- கல்விக்கான உரிமை – அரசியல் சாசனத்தில் உறுதி செய்யப்பட்டதை நிறைவேற்றுதலை கண்காணித்தல் மற்றும் நீதி மன்றங்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட மீறல்களுக்கு தீர்வு அளித்தல்

- போதுமான சத்துணவு மற்றும் உணவுக்கான உரிமை –ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிக்கான திட்டத்தை (ICDS) அனைவருக்குமான பொதுத்திட்டமாக மாற்றுவதற்கான ஆணை மற்றும் உணவுக்கான திட்டங்களை கண்காணித்தல்;

- குழந்தைகளை பாலியல்ரீதியாக துன்புறுத்துவதற்கு எதிரான தீர்ப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டது,

- இளஞ்சிறார் நீதி – தேவைப்படும் குழந்தை பாதுகாப்பு முறை, நடைமுறையில் இருப்பதையும், இந்தச் சட்டம் அமல்படுத்துவது பற்றியும் நீதிமன்றங்கள் கண்காணிக்கின்றன.

## கூடுதலான நிதியாதாரங்கள்

- குழந்தைகளுக்கான தனியான பட்ஜெட் அறிக்கை தருதல் என்பது ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கிற நிதி அறிக்கையின் பகுதியாக மாறி உள்ளது,

- மத்திய பட்ஜெட்டில் குழந்தைகளுக்கான நிதி ஒதுக்கீடு என்பது 1990–2007 இடைப்பட்ட காலத்தில் 4.3 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. 4.1 சதவீதம் செலவில் அதிகரித்துள்ளது.

## குழந்தைகளின் வாழ்வில் என்ன மாறியுள்ளது ?

### 1992–93 மற்றும் 2005–06 காலகட்டத்தில் சுகாதாரமும் உயிர் பிழைத்தலும்

- பிறப்புகளை பதிவதில் 18.6 சதவீதம் முன்னேற்றம்
- குழந்தை திருமணங்களில் 11.3 சதவீதம் குறைவு
- குழந்தை மரண விகிதம் (NMRல்) 10 புள்ளிகள் குறைந்தது. NMR ல் 12 புள்ளிகள் குறைந்தது. சிசு மரணம் (NMR) விகிதம் 22 புள்ளிகள் குறைந்தது.
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணம் என்பது 35 புள்ளிகள் குறைந்துள்ளது.
- தடுப்பூசிகள் போடுவது 8.1 சதவீதம் கூடுதலாகி உள்ளது.
- மூன்று வயதுக்கு மேற்பட்ட எடை குறைவான குழந்தைகளில் 23 சதவீதம் குறைந்துள்ளது.
- ஆறு மாதம் முதல் 59 மாதங்கள் வயதுக் குழந்தைகள் இடையே உள்ள ரத்தசோகை 4.8 சதவீதம் குறைந்துள்ளது.
- Acute Respiratory Infection (ARI) அறிகுறிகள் உள்ள ஐந்து வயதுக்கும் குறைவான குழந்தைகள் 13.5 சதவீதம் குறைந்துள்ளது.
- வயிற்றுப்போக்கு பிரச்சனைகளுக்காக சிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்படும் ஐந்து வயதுக்கு மேலான குழந்தைகள் 3.6 புள்ளிகள் அதிகரித்துள்ளது.

**2005–06 மற்றும் 2008–09 காலகட்டத்தில் கல்வி (மாவட்ட அளவிலான தகவல் கிடைத்த காலம் மட்டும்)**

- பள்ளி செல்லும் வயதினர் பள்ளியில் சேர்வது என்பது 19.4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- தலித் குழந்தைகள் பள்ளி சேர்வது 1.08 சதவீதம் அதிகரித்துள்ளது.
- பழங்குடி குழந்தைகள் பள்ளி சேர்தல் 2.02 சதவீதம் அதிகரித்துள்ளது.
- பள்ளியில் இருந்து இடைநிற்றல் என்பது ஒட்டுமொத்தமாக 12.1 சதவீதம் குறைந்துள்ளது. (தலித்குழந்தைகள் 12.6 மற்றும் பழங்குடி குழந்தைகள் 15.7)
- ஓராசிரியர் பள்ளிகள் 0.4 சதவீதம் குறைந்துள்ளது.
- 100 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதம் உள்ள பள்ளிகள் 0.5 சதவீதம் குறைந்துள்ளது.
- ஒரே அறை உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 2.1 புள்ளிகள் குறைந்துள்ளது.
- பொதுக்கழிப்பிடங்கள் உள்ள பள்ளிகள் 10.1 சதவீதம் அதிகரித்துள்ளது.
- பெண் குழந்தைகளுக்கான தனி கழிப்பிடம் உள்ள பள்ளிகள் 19 சதவீதம் அதிகரித்துள்ளன,
- குடிநீர் உள்ள பள்ளிகள் 0.1 சதவீதம் அதிகரித்துள்ளன.
- ஒரு வகுப்பறைக்கான மாணவர்கள் எண்ணிக்கை என்பது 40 லிருந்து 36 ஆக குறைந்துள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான படிகட்டுகள் (Ramps) உள்ள பள்ளிகள் 21.3 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 1.5 கி.மீட்டருக்குள் ஒரு பள்ளி என்பது 4.7 சதவீதம் அதிகரித்துள்ளது.

**ICPSக்குப் பிறகான குழந்தைப் பாதுகாப்பு**

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மத்திய அமைச்சகத்தின்படி 2009 š ICPS துவக்கப்பட்டதில் இருந்தே குழந்தை உரிமைகளுக்கு என சட்டபூர்வமான அமைப்புகளை துவக்குவது என்பது அதிகரித்து வந்துள்ளது.
- குழந்தை நல குழுக்கள் (CWC) (இரண்டு மடங்காக) 240 லிருந்து 548 ஆக உயர்ந்துள்ளது.
- இளஞ்சிறார் நீதிகுழுக்கள் 211லிருந்து 561 ஆகியுள்ளன.
- 660 சிறப்பு இளஞ்சிறார் காவல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- மாநில குழந்தை பாதுகாப்பு சொசைட்டிகள் 21 அமைக்கப்பட்டுள்ளன.
- 14 மாநிலங்களில் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு சொசைட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- குழந்தைகளுக்கான உதவி மையங்கள் 181 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 280 ஆக 11 வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

MdhYk; gy mk;rq;fspy; Foe;ij cupik cld;gbf;ifapd; mkyhf;fk; ek;ik kdk; frf;fr; nra;fpwJ.

- குழந்தைகள் பாலின விகிதம் 945ஆக-1991-ல் இருந்தது 2011-ல் அது 914 ஆக குறைந்துவிட்டது.
- 13 – 19 வயதுள்ள வளரிளம் பருவத்தினர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1981ல் 898, 1991ல் – 884, 2001ல் - 10-19 வயது வளரிளம் பருவ குழந்தைகள் எண்ணிக்கை, 882 ஆக குறைந்துள்ளது. 0-6 வயதுள்ள குழந்தைகள் எண்ணிக்கை 927 ஆகம்.
- 1992-1993-2005-06-க்கு இடையில் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் சராசரி புள்ளிவிவரம் 17.7 சதவீதமாகும். 3 வயதுக்குக் குறைவான குழந்தைகளின் சராசரி 6.4 ஆகவும் உயர்ந்துள்ளது.
- 1991-2001 -க்குப்பிறகு 12.23% குழந்தை உழைப்பு அதிகரித்துள்ளது.
- 1994-2004க்கு இடையில் குழந்தைகள் மீதான வன்முறைகளும் குற்றங்களும் அதிகரித்து வருகின்றன.
- வயிற்றுப்போக்குக்குக்கான சாதாரண சிகிச்சையான வாய்மூலமாக ஹைட்ரஜன் உப்புகளை தரும் முறையை பயன்படுத்துவது என்பது இரண்டு சதவீதம் குறைந்துள்ளது. வயிற்றுப்போக்குக்கு சிகிச்சையை எதிர்பார்த்து நிறைய குழந்தைகள் இருக்கும் நிலையில் 1998–99 மற்றும் 2005–06 காலகட்டத்தில் ORT அல்லது அதிகமான திரவ ஆகாரங்களை தருவது என்பது ஐந்து புள்ளிகள் குறைந்துள்ளது. சிகிச்சை கிடைக்காத குழந்தைகள் சதவீதமும் 1.3 புள்ளிகள் அதிகரித்துள்ளது.
- மாற்றுத்திறனாளிகளாக உள்ள குழந்தைகள் பள்ளி சேர்வது என்பது 2004–05 மற்றும் 2008–09 காலகட்டத்தில் 0.24 சதவீதம் குறைந்துள்ளது.
- பள்ளிகள் உள்கட்டமைப்புக்காக அதிக நிதி செலவு செய்யப்பட்ட போதிலும் கட்டிடங்கள் இல்லாத

பள்ளிகள் சதவீதம் 2005–06 மற்றும் 2008–09 காலகட்டத்தில் ஏறத்தாழ ஒரு சதவீதம் அதிகரித்துள்ளது.

- Cluster Resource Centers (CRC) க்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பள்ளிகள் எண்ணிக்கை 8 புள்ளிகள் வரை குறைந்துள்ளது. ஐந்து கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள பள்ளிகள் சதவீதம் 3.3 புள்ளிகள் அதிகரித்துள்ளது.

- 1994க்கும் 2009க்குமாக காலகட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான எல்லாவித வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

– குழந்தைக் கொலை –26.7 சதவீதம்

– கருக்கொலை–173.3 சதவீதம்

– தற்கொலைக்கு தள்ளுதல் – 557 சதவீதம்

– 12 வயதுக்கு கீழேயான குழந்தைகளை கைவிடுதல் – 74 சதவீதம்

– குழந்தை கடத்தல் – 935 சதவீதம்

– சிறுமிகளை விபச்சாரத்துக்காக விலைக்கு வாங்குதல் – 935 சதவீதம்

– சிறுமிகளை விபச்சாரத்துக்காக விலைக்கு விற்றல் – 67.6 சதவீதம்

– வாங்கல் விற்றல் எண்ணிக்கையில் பெரும் வித்தியாசம் இருப்பது என்பதால் இத்தகைய இடங்களில் காவல்துறைக்கு ஒருங்கிணைப்பு குறைவாக இருக்கிறது, இத்தகையை வழக்குகளை நடத்துவதிலும் விசாரிப்பதிலும் அக்கறை குறைவாக இருக்கிறது என்பதை காட்டுகிறது,

- தேசிய குற்ற ஆவண அமைப்பு, (NCRB) குழந்தைகளுக்கு எதிரான கருவுறுதல் தடுப்பு மற்றும் கருக்கொலை தொடர்பாக பதிவு செய்யப்படும் குற்றங்கள் பற்றிய தகவல்களை வைத்திருப்பதில்லை, மற்றும் தொழிலாளர்துறை கையாளும் குழந்தை உழைப்பாளிகள் வழக்குக்களும் குற்றமாகக் கருதப்படவில்லை.

- 2001 மற்றும் 2009 ல் கருக்கொலைக்கான தண்டனை என்பது 13.8 சதவீதம் குறைந்தது. ஆனால் கருக்கொலை 51.9 சதவீதம் குறைந்தது, பல வழக்குகள் கருக்கொலைக்குப் பதிலாக கொலை வழக்குகளாக பதிவு செய்யப்படுகின்றன.

- குழந்தைத் திருமணங்கள் பற்றிய வழக்குகள் மூன்று தான் தற்போதைய குழந்தை திருமணத் தடுப்பு சட்டம் 2006ன் கீழ் 2009ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இந்தச் சட்டம் பயன்படுத்தப்படாமல் இருப்பதைக் காட்டுகிறது. NFHS ஆய்வு என்பது 27.1 சதவீதம் 15லிருந்து 19 வயதுக்குள் திருமணம் செய்து கொள்கிறார்கள் எனக் கூறுகிறது.

- குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 2001 –2009 காலகட்டத்தில் 2.9 சதவீதம்தான் அதிகரித்துள்ளன.

- **குழந்தைகளின் வாழ்வில் அதிகமான கவலையும் வேதனையும் உள்ளன என்பதற்கான வெளிப்பாடுகள் தான் குழந்தைகளால் இழைக்கப்படும் குற்றங்கள்.**

– வழிப்பறி 2001 –2009 காலகட்டத்தில் 881.6 சதவீதம் அதிகரித்துள்ளது.

– பாலியல் பலாத்காரம்,கடத்தல் கொள்ளை, மோசடி மற்றும் பல வன்முறைகளை குழந்தைகள் செய்திருப்பது என்பது 300 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

– குழந்தைகளால் செய்யப்பட்ட மோசடி, கொலை முயற்சி, வழிப்பறி, சூதாட்டம் மற்றும் வேகமாக, பாதுகாப்பற்ற முறையில் வாகனத்தை ஓட்டி மரணத்துக்கு காரணமாகுதல் போன்ற குற்றங்கள் 200 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளன.

– குழந்தைகள் சம்மந்தப்பட்ட வழக்குகள் தேங்கிக் கிடப்பது என்பது 0.7 சதவீதம் கூடதலாகி உள்ளது.

,ilntspfSk; rthy;fSk; Vuhskhf cs;sd:

mtw;wpy; rpy:

- முற்போக்கன நீதிமன்ற ஆணைகளுக்குப் பிறகும், சட்டம் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவது மிகவும் மோசமாக உள்ளது. உதாரணமாக, உச்சநீதிமன்றம் பரிந்துரைத்தபடி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிதிட்டம் (ICDS) நிறைவேற்றம் ஒரே மாதிரியாக இல்லை. இப்போதும் 800,000க்குப் பதிலாக 768282 என்ற எண்ணிக்கையில்தான் குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன.

- குழந்தை என்பதற்கான விளக்கம் நமது சட்டங்களிலும் சட்ட நடைமுறை ஆவணங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை.

- ஆபத்து நிலையிலுள்ள குழந்தைகள், அவர்களின் குடும்பங்களின் நிலை, பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் குறித்து தெரிந்துகொள்ள எந்த அளவுகோலும் புள்ளி விவரங்களும் இல்லை.

- நமது நோக்கங்களும் அணுகுமுறைகளும் மாறிச்செல்கின்றன என்பதை நடைமுறையில் அறிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக,

– 2000த்திலேயே 100 சதவீதம் எல்லா பிறப்பு இறப்புகளை பதிவு செய்துவிடலாம் என்ற குறிக்கோள் இருந்தது. இன்று வரை அது முடியவில்லை.

– ஒரு வயதுக்குள்ளாக இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை 1000த்துக்கு 60ஆக 2002க்குள்

குறைக்க முயற்சிகள் நடந்தன.10 வது ஐந்தாண்டு திட்டத்தில் 2010 த்துக்குள் 45 ஆகவும் 2012 க்குள் 28 ஆகவும் குறைக்க முயற்சி எடுக்கப்பட்டது, எதுவும் நடக்க வில்லை. பதினோராவது திட்டம் 28 ஆக குறைப்பது பற்றி பேசுகிறது.ஆனால் காலக்கெடு எதையும் வைக்கவில்லை. NFHS-3 ஆய்வின்படி தற்போது 1000 த்துக்கு 57 குழந்தைகள் இறக்கின்றன.

- 1974-ம் ஆண்டின் குழந்தை உரிமைக்கான கொள்கை இக்காலத்திற்கு ஒவ்வாததாக உள்ளது.
- **குழந்தை உரிமைகளுக்கான குழுக்களின் கீழ்க்கண்ட பரிந்துரைகள் இன்னமும் நிறைவேறவில்லை.**

– குழந்தைகளுக்கான ஒரே மாதிரியான சட்டவிதி முறைகள் இல்லாதது, தத்து எடுப்பதற்கான முறையான சட்டம் இல்லாதது

– தேசிய சட்டங்களோடு தனிப்பட்ட சட்டங்களுக்கு இணக்கம் ஏற்படுத்துதல், குற்ற பொறுப்புணர்ச்சிக்–கான வயது வரம்பை உயர்த்துதல்

– இளஞ்சிறார் நீதி சட்டத்தை காஷ்மீர் உள்ளிட்டு நாடுமுழுவதும் நீட்டித்தல்

– அரசு அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்க விடாமல் தடுக்க கூடிய முறையில் திருத்தப்பட்டுள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகளை நீக்குதல்

– 14 வயதுவரையான எல்லாக் குழந்தைகளுக்குமான இலவச கட்டாய கல்வியை உத்தரவாதப்படுத்தல்

– குடும்பம், பள்ளிகள், நீதித்துறை மற்றும் நிர்வாக அமைப்புகளின் நடவடிக்கைகளில் குழந்தையை பங்கேற்கச் செய்ய முயற்சித்தல்.

– இன (சாதி ) ரீதியான பாகுபாடு மற்றும் அன்னியர்கள் மீதான வெறுப்பு பற்றி அறிவித்தல்.

– பஞ்சாயத்துகளுக்கு குழந்தை உரிமைகளை பற்றி பயிற்சி அளித்தல்.

– குற்றங்களுக்கு ஆளான குழந்தைகள் உளவியல் ரீதியாக மீண்டு வருவதை உறுதிப்படுத்தல்.

– குடும்ப அமைப்புகளில் உடல்ரீதியான, மனரீதியான தண்டனைகளை தடுப்பது.

– வன்முறையற்ற ஒழுக்க வடிவங்களைத் தூக்கிப் பிடித்தல்.

– குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையில் குழந்தை உழைப்பு பற்றிய பிரிவு என் 32 மீதான இந்தியாவின் அறிவிப்பை நீக்குதல்.

– வேலை செய்வதற்கான குறைந்த பட்ச வயது சம்மந்த மாக உலகத் தொழிலாளர் அமைப்பின் 138வது கூட்டம் அறிவித்து இருப்பதை ஏற்றுக்கொள்ளல்.

– சித்ரவதை மற்றும் மற்ற வகையான கொடூரமான மனிததன்மையற்ற தரக்குறைவான நடத்தைகள் மற்றும் தண்டனைக்கு எதிரான உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளல்.

– அகதிகள் மற்றும் அவர்களின் நிலை பற்றிய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளல்.

**குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையின் அனேக பிரிவுகளுக்கு பொருந்துமாறு எடுக்க வேண்டிய பல நடவடிக்கைகள் பற்றாக்குறையாகவே உள்ளன.**

– அனைத்து மாநிலங்களும் இன்னமும் ஆணையத்தை உருவாக்கவில்லை.

– உருவாக்கப்பட்ட 12 மாநிலங்களில் 9ல் இன்னமும் அவை செயல்படுவதற்கான விதிமுறைகள் கூட வகுக்கப்படவில்லை.

– தேசிய ஆணையம் மற்றும் மாநில ஆணையங்கள் நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல நெருக்கடிகளில் உள்ளன,

– குழந்தைகள் சம்மந்தமான விவகாரங்களில் அவர்களையும் இணைத்துக்கொண்டுதான் முடிவுகளை எடுக்க வேண்டும் என்று உடன்படிக்கை வலியுறுத்துகிறது. ஆனால் நடைமுறையில் அது இல்லை.

– சேவை அமைப்பினருக்கான பயிற்சிகள் முறையாகவும் தொடர்ச்சியாகவும் நடத்தப்பட வேண்டும்.

Kd;ndLj;Jr;nry;yNtz;bait:

குழந்தைகளின் இன்றைய நிலையை (சூழலை) மாற்றுவதற்காக முனைப்புடன் செய்யவேண்டிய பல பகுதிகள்:

❖ குழந்தைகளின் நிலையை கண்காணிப்புச் செய்யும் குழந்தை உரிமை அட்டவணையை அனைத்து மாநிலங்களிலும் உருவாக்க வேண்டும்.

❖ மாவட்ட அளவில் குழந்தைகளின் நிலை குறித்து தொடர்ந்து அறிந்து கொள்ளும் வகையில் புள்ளி விவரங்கள் எளிதில் கிடைக்கும்படிச் செய்யும் நிலையை உருவாக்குதல் வேண்டும்.

❖ குழந்தை உரிமைகள் மேம்பாட்டில் முன்னணியில் நிற்கும் மாநிலங்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்குதல் வேண்டும்.

❖ உள்கட்டமைப்பு, மனிதவளம், நிதிவளம் போன்றவற்றை பெருக்கி அதை சீராகப் பயன்படுத்துதல் வேண்டும்.

❖ சட்டங்களை அமல்படுத்தத் தேவையான நிதியினை சரியாக வரையறை செய்தல் வேண்டும்.

- ❖ பயிற்சிகள் மற்றும் திறன்வளர்த்தல் போன்றவற்றை மூலதனமாகக் கருதி அவற்றுக்கு முக்கியமளிக்க வேண்டும்.
- ❖ பழங்குடி மக்களின் குழந்தைகள் முரண்பாடுள்ள பகுதிகள் மற்றும் கண்காணிக்கவேண்டிய பகுதிகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- ❖ திட்டங்கள் பயன்பாட்டினை வெறுமனே மதிப்பீடு செய்வதை விட அவற்றின் வளர்ச்சி மற்றும் தேக்கங்களை சீராய்வு செய்துபார்த்தல் வேண்டும்.
- ❖ அனைத்து நிலைகளிலுமுள்ள துறைகளின் செயல்பாட்டு இடைவெளியை குறைத்து அவற்றின் ஒருங்கிணைப்பை எளிதாக்குதல் வேண்டும்.
- ❖ பன்னாட்டு கடமையினை (உறுதிப்பாட்டை) உறுதிப்படுத்த அறிக்கை முறையை செழுமைப் படுத்துதல் வேண்டும்.
- ❖ சமூக அமைப்புகளுடன் கலந்தாலோசித்து வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புடனும் அரசு செயல்படல் வேண்டும்.

## குழந்தைகளின் குரல்

- சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் குழந்தைகள் நன்றாக செயல்பட முடியும் என குழந்தைகள் விரும்புகிறார்கள்.
- தங்களின் குடும்பங்களின் மீது அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்,
- தங்களுக்கு பிறப்பு சான்றிதழ்கள் தரப்பட வேண்டும் அதை கொண்டு தங்களுக்கான திட்டங்களின் பயன்களை அடைய முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள்.
- மாற்று திறனாளிகளாக உள்ள குழந்தைகள் தங்களுக்கு பராமரிப்பு, சிகிச்சை என ஆரோக்கியமான சூழ்நிலை வேண்டும் என்கிறார்கள்.
- தங்களால் பேச முடியாதவர்களாக மனநிலை பாதிக்கப்பட்ட குாந்தைகள் இருந்தாலும் தங்களுக்கான உரிமைகளை அவர்கள் அனுபவிக்க முடியாதவர்களாக உள்ளனா்.
- போர் முனைகளில் உள்ள குழந்தைகள் தங்களை பற்றி கவலை கொள்வார்களா என ஏங்குகிறார்கள் .
- தங்களது வீடுகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் அவர்களுக்கு வேண்டும். அவர்கள் பாதுகாப்பான வாழ்க்கையை விரும்புகிறார்கள் .

**இந்த சீராய்வுத் தணிக்கையின் தொடர்ச்சியாக 'ஹக்' – குழந்தை உரிமை நிறுவனத்தால் பெரிடெஸ் ஹேராம்ஸ் (ஜெர்மனி) உதவியோடு ஒரு கோரிக்கை மனு வரைவு செய்யப்பட்டு, இந்திய அரசு பின்வரும் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.**

1. குழந்தை உரிமைகள் உடன்படிக்கையின் 32வது விதி தொடர்பான ஒவ்வொரு அறிவிப்பையும் இந்திய அரசு உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும்; அதன் மூலம் குழந்தை உரிமைகள் உடன்பாட்டை முழுமையாகவும் முற்றிலுமாகவும் அங்கீகரிக்க வேண்டும்.
2. குழந்தைகளுக்கான வயது வரம்பு தொடர்பான உடன்பாட்டை இந்திய அரசு 1992ல் அங்கீகரித்திருக்கிறது. அதற்கேற்ப, 18 வயதுக்கு கீழ்ப்பட்ட ஒருவர் குழந்தையே என அறிவிக்கும் வகையில் அரசமைப்பு சாசனத்தில் உரிய திருத்தத்தை இந்திய அரசு செய்ய வேண்டும்.
3. தற்போதைய குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் – 1986ஐ இந்திய அரசு விலக்கிக்கொள்ள வேண்டும்; 18 வயது வரையிலான எல்லாக் குழந்தைகளையும் எந்தவொரு துறையிலும் குழந்தைத் தொழிலாளர்களாக நியமிக்க தடை விதிக்கும் புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.
4. 1974ம் ஆண்டின் தேசிய குழந்தைகள் கொள்கையை இந்திய அரசு மறு ஆய்வு செய்ய வேண்டும்; இனிமேலும் தாமதமின்றி குழந்தைகளுக்கான ஒரு புதிய விரிவான கொள்கையை உருவாக்க வேண்டும்.
5. 2009ம் ஆண்டின் குழந்தைகளுக்கான இலவச, கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தை, 18 வயதுக்கு கீழ் உள்ள அனைவரையும் இணைக்கும் வகையில், விரிவுபடுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.
6. வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்ட குழந்தைகளின் குரலுக்கு இந்திய அரசு செவிமடுக்க வேண்டும், பெரியவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளித்தல், மரியாதையான ஊதியம் கிடைக்கச் செய்தல், வேலை செய்யும் நிலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்ட குழந்தைகளின் குடும்பங்களுக்கான சிறப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அந்தக் குழந்தைகளின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.
7. குழந்தைகளின் இயற்கைச் சூழல் உரிமைகளை இந்திய அரசும் சம்பந்தப்பட்ட அனைவரும் அங்கீகரிக்க வேண்டும், ரசாயன உரங்கள், தொழிற்சாலை மாசு, பல்லுயிர் அழிப்பு, நீர் வறட்சி, இதர பருவநிலை மாற்றம் தொடர்பான பாதிப்புகள் போன்ற அனைத்துவிதமான இயற்கை சூழல் மற்றும் சுற்றுச்சூழல் கேடுகளிலிருந்து குாந்தைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# தம்பட்டம் அடித்து கொள்ளும் வளர்ச்சி

## கர்நாடகாவின் குல்பர்கா மற்றும் பீஜப்பூர் மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் சத்து பற்றாக்குறையோடு இருப்பது என்பது அந்த மாநிலத்தின் மதிப்பிற்கு ஒரு களங்கமே

**– விகார் அகமது சயீத்**

கர்நாடகத்தில் சத்துப்பற்றாக்குறையால் அல்லது மோசமான முறையில் எடை குறைவாக இருப்பதால் பாதிக்கப்பட்டு இருப்பதாக 71,605 குழந்தைகள் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கான மாநில அரசுத்துறையின் 2011 ஆகஸ்ட் வரையிலான புள்ளிவிவரங்களின்படி இது தெரியவருகிறது.

! பாபா பசவண்ணா
! அங்கன்வாடி ஹோயண்ணா
! அவெரெகாலு தின்னோனா
! அ, ஆ, இ, ஈ பரியானா
! மானோ கடேசே ஹோயோனா,
! வா, வா பசவண்ணா
! அங்கன்வாடி போவண்ணா
! பீன்ஸ் வாங்கி தின்போம்னா,
! *ABCD* எழுதுவோம்னா
! வீட்டை நோக்கி ஓடுவோம்னா

இந்த சின்னப்பாடலை சாவித்திரி நிம்மத் பாட, அவரை சுற்றி வட்டமாக உட்கார்ந்துள்ள 20 குழந்தைகள் திருப்பி கத்திப் பாடுகிறார்கள். ஏறத்தாழ அனைவரும் 3 வயதில் இருந்து ஆறு வயதுக்குள்ளானவர்கள். இரண்டு பெரிய குழந்தைகள், ஒரு குழந்தையின் தோளில் நடக்கிற வயதில் உள்ள ஒரு குழந்தை இருந்தது. ஒரு பெரிய மரத்தின்கீழ் அமர்ந்து குழந்தைகள் மனம்விட்டு பாடிக்கொண்டு இருப்பது தூரத்தில் இருந்து பார்க்கும்போது கிராமப்புற இந்தியாவுக்கான ஒரு லட்சிய ஏற்பாடு போல இருந்தது. இந்த பளபளப்பான தோற்றத்துக்கு பின்னால் உண்மையில் என்ன இருந்தது என்று தெரிந்துகொள்வதற்கு அதிக தூரம் போக வேண்டியது இல்லை. கர்நாடகத்தின் பீஜப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அல்மேல் பஞ்சாயத்தில் 12வது அங்கன்வாடி மையத்தின் பொறுப்பாளர் சாவித்திரி அவரை சுற்றி வட்டம் போட்டு உட்கார்ந்துள்ள சிறுவர் சிறுமியரில் ஒருத்தி அஸ்வினிதேவி போவி. அவளுக்கு 5 வயது முடிந்து மூன்று மாதம் ஆகிறது. அவளது எடை வெறும் 13 கிலோதான். மலூர் குண்டப்பா மர்னல் எனும் சிறுமியும் 5 வயதுதான். அவள் வெறும் பத்தரை கிலோதான் இருந்தாள். 2010–11 வருடத்தில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட வளர்ச்சிக் குறியீடுகளை வைத்து மதிப்பிட்டால் இந்த இரண்டு பேரும் ''மிக மோசமாக எடைக்குறைவால் பாதிக்கப்பட்ட'' பிரிவைச் சேர்ந்தவர்கள்.

அஸ்வினியின் அப்பா நாகப்பா போவி, ஒரு விவசாயத் தொழிலாளி, தினமும் 150 சம்பாதிக்கிறார். சோளம்தான் இங்கே பொதுவாக விளைகிறது. சிவப்பு பருப்பும் வேறு சில பருப்புகளும் கூட பயிரிடப்படுகின்றன. விவசாயத்துக்கு அடுத்தபடியாக கல் உடைக்கும் தொழில் நடைபெறுகிறது.

கொஞ்ச தூரத்திலேயே 11வது அங்கன்வாடி உள்ளது. அங்கேயும் மரத்தை சுற்றியும் எல்லாம் நடக்கிறது. இந்தப் பகுதியில் இஸ்லாமியர்கள் கணிசமாக உள்ளனர். குழந்தைகள் உட்கார்ந்து இருந்த இடத்திற்கு பக்கத்திலேயே பன்றிகளும் மாடுகளும் மேய்ந்து கொண்டு இருக்கின்றன. இந்த அங்கன்வாடியின் பொறுப்பாளர் பர்தோஸ் மோமின். சோளத்தில் செய்த சத்துணவை கொடுப்பதற்காக குழந்தைகளை அவர் ஒன்று சேர்த்து கொண்டு இருந்தார். அவர் சத்துணவுப் பையை திறந்தவுடனே குழந்தைகள் சந்தோஷத்தால் கத்திக் கூச்சலிடுவார்கள். அந்த மஞ்சள் உருண்டைகள் அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

பார்தாஸ் மொமினின் தோளில் இருந்த சபனா பீ பிறந்து 15 மாதங்கள் ஆகிறது. ஆறு கிலோ எடை இருக்கிறார். அங்கன்வாடிக்கு பக்கத்திலேயே சபனா பீயின் வீடு உள்ளது. அவளது தாயின் தோளில் சபனாபீவின் அக்கா கிடக்கிறாள். இந்த குழந்தைகளின் அப்பா முகமது ரசூல். கட்டுமான தொழிலாளி. தினமும் 100 ரூபாய் சம்பாதிக்கிறார். அவர்களது சிறு குடிசையில் இன்னும் நான்கு பெரியவர்கள் உள்ளனர். வீட்டின் முன்பாக மிளகாய் காய்ந்து கொண்டு உள்ளது. பர்தோஸின் பின்னால் உடம்புக்கு சரியில்லாதவன் போல தெரிந்த பையன் சத்துணவு விநியோகிக்கப்படும்போது ஓடிவிடுகிறான். அவன் பெயர் அமீன் மெஹபூப். இரண்டு வயதான அவன் 10 கிலோ எடை இருந்தான். குழந்தைகளின் வளர்ச்சிக்காக கர்நாடக மாநில அரசுத்துறை, பெண்கள் 2011 ஆகஸ்ட் வரை சேகரித்த விவரங்களின்படி, 71,605 குழந்தைகள் மிக மோசமாக சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டு எடை குறைவாக உள்ளதாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது. அவர்களில்

அஸ்வினி, குண்டப்பா, ஷாபனா மற்றும் அமீன் வருகிறார்கள். மாநிலத்தில் உள்ள ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் இது 2.17 சதவீதம் வருகிறது. மொத்தம் 33 லட்சத்து 2370 குழந்தைகளில் 21 லட்சத்து 818 பேர் அவர்களின் வயதுக்கு ஏற்ற எடையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 11 லட்சத்து 29947 குழந்தைகள் ஓரளவு சத்துக்குறைவாக உள்ளதாக தெரியவந்துள்ளது. குடும்ப ஆரோக்கிய சுகாதாரத்தை பற்றிய மூன்றாவது தேசிய ஆய்வு 2004–05 ஆம் ஆண்டு நடந்தது. குழந்தைகளிடையே சத்து பற்றாக்குறை இருப்பது சம்மந்தமான விசயத்தில் மற்ற தென் மாநிலங்களைவிட கர்நாடகா மோசமாக இருப்பதாக அதன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று வயதுக்குட்பட்ட எடை குறைவான குழந்தைகளை வைத்து மதிப்பிட்டால் மாநிலத்தில் சத்துப் பற்றாக் குறையால் பாதிக்கப்பப்டட குழந்தைகளின் சதவீதம் 45.9ஆக உள்ளது என அதே ஆய்வு தெரிவிக்கிறது. பிறந்த ஒரு வருடத்திற்குள் இறந்துபோகும் குழந்தைகளின் விகிதம் என்பது கர்நாடகத்தில் 1000த்துக்கு 432ஆக இருந்தது. இதுவே தமிழகத்தில் 30.4 சதவீதமாகவும் கேரளாவில் 15.3 சதவீதமாகவும் இருப்பதாகவும் அந்த ஆய்வு கூறியுள்ளது. ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகளின் இறப்புகளில் சத்து பற்றாக்குறை என்பது பாதிப்பேரின் இறப்புக்கு காரணமாக இருக்கிறது. ஐ.நா. சபையின் யுனிசெப் நிறுவன மதிப்பீட்டின்படி, உலகம் முழுவதும் உள்ள சத்துக்குறைவான (நோஞ்சான்) குழந்தைகளில் மூன்றில் ஒன்று இந்தியாவில் இருக்கிறது. சத்துப்பற்றாக்குறை உள்ள மனித வளர்ச்சி அளவீடுகளில் மிக மோசமான நிலையில் உள்ள சில ஆப்பிரிக்க நாடுகளைவிட இந்தியாவில் மோசமான முறையில் சத்துப்பற்றாக்குறை உள்ளது. 2011 சுதந்திரதின உரையின்போது பிரதமர் மன்மோகன் சிங் குழந்தைகளிடையே உள்ள சத்து பற்றாக்குறை விசயத்தை பேசினார். அதனை உடனடியாக தீர்க்க வேண்டி இருப்பதையும் அங்கீகரித்தார்.

## திறன் இல்லாத பதிவுகள்

கர்நாடகத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டு உள்ள 71605 குழந்தைகள் உள்ளனர் எனும் எண்ணிக்கை கூட சந்தேகத்துக்கு உரியதே, குல்பர்கா மற்றும் பீஜப்பூர் மாவட்டங்களில் பார்த்த வரைக்கும் பல மிக மோசமாக பாதிக்கப்பட்ட சத்துக்குறைவான குழந்தைகள் பதிவு செய்யப்படாமல் இருப்பதையும், குழந்தைகளை எடை பார்த்து பதிவு செய்வதும் போதுமான திறன் கொண்டவையாக இல்லை என்பதையும் பிரெண்ட் லைன் பதிவு செய்தது.

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல்களின்படி ஒவ்வொரு மாதமும் குழந்தைகள் எடை கணக்கிடப்பட வேண்டும். அதன்படி அவர்களின் சத்துணவு நிலவரம் பட்டியலிடப்பட வேண்டும். ஆனால், பீஜப்பூரில் பார்த்த நான்கு அங்கன்வாடி மையத்தில் ஒன்றில்தான் எடைபார்க்கும் மிஷின் இருந்தது. குல்பர்கா மாவட்டத்தில் கோணகுண்டா கிராமத்தில் 105வது அங்கன்வாடி மையம் உள்ளது. அங்கே மிக மோசமாக பாதிக்கப்பட்ட எடை குறைவானதாக ஒரே ஒரு குழந்தை தான் இருப்பதாக அதன் பொறுப்பாளர் காலம்மா பசவராஜ்சொன்னார். ஆனால் அங்கிருந்த குழந்தைகளில் சிலரை எடுத்து எடை போட்டதில் மிக மோசமானதாக மேலும் மூன்று குழந்தைகள் இருப்பதை கண்டோம். தான் தற்போதுதான் இதை தெரிந்து கொள்வதாக காலம்மா சொன்னார்.

நாட்டின் மென்பொருள் தலைநகராக கர்நாடகம் இருப்பதாக அளவுக்கு மீறிய பெருமை கொள்ளப்படுகிறது. அதற்கு முரண்பாடாக தெரிகிற இந்த நோஞ்சான் குழந்தைகள் பிரச்சனை மத்தியபிரதேசம் போன்ற மாநிலங்களில் இருப்பதை போல அவசரப் பிரச்சனையாக தோற்றம் அளிக்காமல் இருக்கலாம். ஆனால், கடலோர தென்னிந்திய மாநிலமான கர்நாடகாவின் வளம்தான் அரசின் சராசரிக்கு மேலாக அதனை அதிகமாக்குகிறது. வடக்கு கர்நாடகாவின் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் சத்துணவு பற்றாக் குறையாக இருப்பது என்பது மிக கடுமையாக இருக்கிறது. உதாரணமாக, பகல்கோட் (மிக மோசமாக எடை குறைவாக உள்ள குழந்தைகள்–8957), பீஜப்பூர் (8983), பெல்லாரி (6411), தாவங்கீர் (3724), பெல்காம் (7016), ஹவேரி (4537), ஹோப்பல் (4085), ராய்ச்சூர் (4537) எனும் மாவட்டங்கள் எல்லாம் வடக்கு கர்நாடகாவில் உள்ளன. மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் இந்த எட்டில்தான் மாநிலத்தில் உள்ள 70 சதவீத சத்துக்குறைவான (நோஞ்சான்) குழந்தைகள் உள்ளன.

அல்மெலில் உள்ள 14 அங்கன்வாடிகளில் மூன்றுக்குத் தான் நிரந்தரக் கட்டிடங்கள் உள்ளன. மீதமுள்ளவை மரத்தடியிலும் கோயில் திண்ணையிலும் உள்ளன. அங்கன்வாடி பொறுப்பாளர்கள் சாவித்திரி நிம்மத்தும், பர்தோஸ் மின்னும் 2006–07ல்தான் அங்கீகரிக்கப்பட்டு உள்ளனர். அதன்பிறகுதான் பள்ளிக்கு முந்தைய பருவகல்வி, மதிய உணவு, சத்துணவு பண்டங்கள் போன்றவற்றை விநியோகிக்கும் மையங்களாக வெளியிடங்கள் மாறி உள்ளன. மாநில அரசுத்துறையின் தகவல்படி மாநிலத்தில் உள்ள பாதி அங்கன்வாடி–களுக்குதான் நிரந்தர கட்டிடம் உள்ளது. அங்கன்வாடி என்பது கோரிக்கை வந்தால்தான் அமைக்கப்படும். சராசரியாக 800 பேருக்கு ஒரு அங்கன்வாடி அமைக்கலாம் என ஆலோசிக்கப்பட்டுள்ளது.

(மாநிலத்தின் மக்கள் தொகையில் 11.2 சதவீதமாக ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ளனர்). தற்போது 63377 மையங்கள் உள்ளன. குழந்தையின் ஆரம்ப வருடங்களில், பாதுகாப்பு மற்றும் கர்ப்பமாக உள்ள மற்றும் பால் கொடுக்கும் தாய்மார்களின் உடல்நலம் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவும் நோஞ்சான் குழந்தைகளுக்காகவும் இந்த மையங்கள் உள்ளன.

**ஐ.நா. சபையின் யுனிசெப் நிறுவன மதிப்பீட்டின்படி, உலகம் முழுவதும் உள்ள சத்துக்குறைவான (நோஞ்சான்) குழந்தைகளில் மூன்றில் ஒன்று இந்தியாவில் இருக்கிறது. சத்துப்பற்றாக்குறை உள்ள மனித வளர்ச்சி அளவீடுகளில் மிக மோசமான நிலையில் உள்ள சில ஆப்பிரிக்க நாடுகளைவிட இந்தியாவில் மோசமான முறையில் சத்துப்பற்றாக்குறை உள்ளது.**

ராய்ச்சூர் மாவட்டத்தின் தேவதுர்கா தாலுக்காவில் போதுமான உணவு இல்லாததால் சாவின் விளிம்பில் இருந்த குழந்தைகளை பற்றிய காட்சிகளை உள்ளூர் தொலைக்காட்சி அக்டோபரில் ஒளிபரப்பியது. பலரின் கவனத்தை அது ஈர்த்தது. அதை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. மாநில அரசுத்துறையை கேள்வி எழுப்பிய நீதிமன்றம் அறிக்கை தருமாறு ஆணையிட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத்துறை தொலைக் காட்சியின் செய்தி தொகுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. உரிய காலத்துக்கு முந்தைய குழந்தைபிறப்பு, குழந்தை திருமணம், குழந்தை பருவ சர்க்கரை நோய்கள், மாலாடி நோயின் அறிகுறிகளான செயல்பட்டு இழப்புகள் ஆகியவற்றை காரணங்களாக அரசு சொன்னது. மனித உரிமை செயல்பாட்டாளர்கள் அதை விமர்சித்தார்கள். 2009ஆம் வருடத்திலிருந்து 2000த்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்திருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

### மறுக்கும் நிலை

சத்து பற்றாக்குறைக்கும் இயலாத் தன்மைக்கும் இடையே தொடர்பு இருக்கிறது என்னும் செயல்பாட்டாளர்களின் கருத்தை மாநில அரசுத்துறை அதிகாரிகள் மறுக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகள் மத்தியில் மாநில அளவில் பணியாற்றும் பிரமிளா போன்றவர்களை பொறுத்தவரை சத்துப்பற்றாக்குறைக்கும் ஊனமுறும் நிலைக்கும் இடையே நேரடி தொடர்பு இருக்கிறது. குழந்தைபருவத்தில் சத்துப் பற்றாக்குறை என்பது ஒரு மனிதரின் வாழ்வில் அவர் வளரும்போது பல்வேறு கடுமையான பின்விளைவுகளை அடுத்தடுத்து கொண்டு வருகிறது. ஒரு குழந்தையின் வாழ்வில் சத்துணவு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து தான் மத்திய அரசு மாநில அரசுகளோடு இணைந்து அங்கன்வாடி மையங்களை நடத்தி வருகிறது, இளங்குழந்தைகளுக்கு சத்துள்ள உணவை வழங்குவதற்கான திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி நிறுவனம் (ICDS) தான் நாட்டின் முக்கியமான திட்டம் ஆகும்.

கர்நாடகத்தில் இந்த திட்டத்தின் கீழ் தரப்படும் சத்துணவு குழந்தைகளுக்கு போதுமான சத்துக்களை வழங்கவில்லை என விமர்சனங்கள் எழுந்துள்ளன, சோளத்தில் செய்த பப்ஸ் தவிர, கேசரிபாத், பீசிபீலே பாத் போன்ற பாரம்பரிய உணவு பண்டங்களின் கலவை ஆகியவை குழந்தைகளுக்கு தரப்படுகின்றன. அரிசியும் பருப்பும் கூட தரப்படுகிறது இந்த உணவு பற்றி குல்பர்கா மற்றும் பீஜப்பூர் மாவட்டங்களில் பிரெண்ட் லைன் சந்தித்து கேட்ட மக்களில் பெரும்பாலோர் “திருப்தியில்லாத உணவு” என்ற முறையிலேயே பதில் தந்தனர். (ஒரு சில பொறுப்பில்லாத பதில்களும் இருந்தன) காலம்மா பசவரஜ்என்பவர் “அரிசிகளோடு கலந்த பிஸிபாலே பாத் மசாலாவை குழந்தைகள் விரும்புவது இல்லை பஸ்தி சத்துணவு குழந்தைகளுக்கு வயிற்றுப் பிரச்சனைகளை உண்டு பண்ணுவதாகவும் சில பெற்றோர்கள் புகார் தெரிவித்தனர்.” என்றார். அதே கிராமத்தின் பீம்நகரைச் சேர்ந்த 8 வயது குழந்தையின் தாய் பத்மாவதியும் இதே மாதிரி சொன்னார். ஹோனகுண்டாவில் ஐந்து அங்கன்வாடிகள் உள்ளன. ஆனால், இரண்டுக்குதான் நிரந்தர கட்டிடட்ம உள்ளது. பீஜப்பூரின் மற்றொரு பின்தங்கிய கிராமம் யெட்கால். அங்கே உள்ள அங்கன்வாடியின் பொறுப்பாளர் தவால்பீ எஸ்.குரி ஆவார். சில குழந்தைகளுக்கு சத்துணவை சாப்பிட்டதும் வயிற்றுப்பிரச்சனைகள் வருகின்றன.

சில குழந்தைகள் மசாலா கலவைகளை விரும்புவதில்லை. தவால்பீ பேசிக்கொண்டு இருந்தபோதே ஒரு நோய்வாய்பட்டதை போன்ற குழந்தை தவழ்ந்து வந்தது. சங்கரானந் தோடாமான் 21 மாதங்கள் வயதானவன். 9.5 எடை இருக்கிறான். மோசமாக பாதிக்கப்பட்ட் பிரிவைச் சேர்ந்தவன்.

இந்த மையத்தில் உள்ள 101 குழந்தைகளில் 68 குழந்தைகள் தலித்துகள், பழங்குடிகள் மற்றும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அங்கன்வாடிகளுக்கு வந்து சேர வேண்டிய உணவுகள் தாலுக்கா அளவிலேயே உறிஞ்சி எடுக்கப்பட்டுவிடுவதாக பல புகார்கள் வந்ததால் 2010ல் அங்கன்வாடிகளுக்கான உணவுபட்டியல் மாற்றப்பட்டது. அதற்கு பிறகு குழந்தைகளுக்கு உடனே கலந்து கொடுக்கக்கூடிய உணவுகள். அவ்வப்போது தயாராகும் அரிசி, பருப்பு மற்றும் உள்ளூர் காய்கறிகள் மற்றும் கீரைகள் வெல்லம் தரப்படுகிறது. "தமிழ்நாடு, கேரளா ஆந்திரபிரதேசத்தில் உள்ளூரில் கிடைப்பவை அங்கன் வாடி குழந்தைகளுக்கு உணவு தயாரிப்பதில் பயன்படுத்தப்படுகின்றன. அதே மாதிரி ஏன் இங்கும் தரக்கூடாது" என்கிறார் குழந்தை இறப்பு மற்றும் சத்து பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளை எதிர்க்கும் இயக்கம் நடத்துகிற ஒய்.மாரிசாமி.

தனியார் கம்பெனியால் தயாரிக்கப்பட்டு பாக்கெட் போடப்பட்ட ரெடிமிக்ஸ் உணவுகள் கர்நாடகாவின் 137 மையங்களில் இருந்து 2010 முதல் அங்கன்வாடிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. குழந்தைகளின் உணவில் பெரும்பான்மையான பாகத்தை இந்த முறை பார்த்துக்கொள்ள தொடங்கியது. இது ஒரு நேரடி விநியோகம். மாநில அரசுக்கும் அங்கன்வாடிக்கும் இடையே வேறு எதுவும் இல்லை. தாலுக்கா மாவட்ட பஞ்சாயத்து அளவில் விநியோகத்தில் இருந்த லஞ்சத்தை நீக்க இது உதவியது. வருடத்தில் 300 நாட்களுக்கும் தொடர்ச்சியாக உணவு கிடைக்கவும் இது வழி செய்தது என்கிறார் மாநில அரசுத்துறையின் இயக்குநர் டாக்டர் சாமிளா இக்பால், அவரின் தகவல்படி ஒரு குழந்தைக்கு 22 கிராம் சோள பப்ஸ், 40 கிராம் கேசரி பாத், 35 கிராம் அரிசி, 5 கிராம் தர் பருப்பு, பிசீபேளா பாத் கலவை மற்றும் 45 கிராம் எனர்ஜி உணவு என தினமும் ஒரு குழந்தைக்கு தரப்படுகிறது. இது ஒரு குழந்தைக்கு தேவையான எல்லா சத்துணவுகளையும் தருகிறது. மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 98 கிராமுக்கு அமிலேஷ் ரிச் எனர்ஜி உணவு தரப்படுகிறது. சத்து பற்றாக்குறை கடுமையான பிரச்சனையாக இருப்பதை அவர் மறைத்தாலும் தனது துறையின் பட்ஜெட் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அப்போது இன்னும் சிறப்பான உணவுகளை தரமுடியும் என்றார். இப்போதைய நிலையில் நாங்கள் ஒரு குழந்தைக்கு 4 ரூபாய் செலவழிக்கிறோம், தமிழ்நாடு 10 ரூபாய்க்கு மேலாக செலவழிக்கிறது, மகராஷ்டிரா இன்னும் கூடுதலாக செலவழிக்கிறது. கேரளாவில் பலமான உள்ளூர் நிர்வாகம் இருப்பதால் அதுவும் முன்னேற்றத்தில் உள்ளது என்றார்.

அரசுத் துறைக்கும் கர்நாடகாவின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல்வாழ்வு துறைக்கும் இடையே எந்த ஒரு ஒருங்கிணைப்பும் இல்லை என்கிறார் அவர். (குழந்தை சத்துப்பற்றாக்குறையை ஒழிப்பதில் இந்த துறைக்கும் கடமை இருக்கிறது.) உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட உணவு பாதுகாப்புக்கான ஆணையர்களின் ஆலோசகர் கிளிப்டன் ரோசரியோ ஒரு அறிக்கை தயார் செய்துள்ளார். அது குழந்தைகளின் சத்து பற்றாக்குறையை போக்குவதில் உள்ள தடைகளை பட்டியலிட்டுள்ளது. மோசமான உணவு, சத்து பற்றாக்குறையால் அவதிப்படும் குழந்தைகளை அடையாளம் காண்பதில் திறன் இல்லாமை, நோஞ்சான் குழந்தைகளை பதிவு செய்வதில் தேவையான போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில் அதிகார மட்டத்தில் தோல்வி, கண்காணிப்பதில் குறைபாடு, இந்த விவகாரத்தை சந்திப்பதில் நல்வாழ்வுத்துறையின் தோல்வி, உள்கட்டுமான பிரச்சனைகள் மற்றும் தலித் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட குழுக்களின் மீது இதன் கடுமையான பாதிப்பு ஆகியவை அதில் உள்ளன. மார்ச் 2010ல் அப்போதைய முதலமைச்சர் எடியூரப்பா ஒருங்கிணைந்த சத்துணவு இயக்கம் என ஒரு திட்டத்தை அறிவித்தார். ஒரு வருடமாக அது அமலில் இருந்தாலும் பிரச்சனையை அதுவும் தீர்க்கவில்லை.

ஒருங்கிணைந்த சத்துணவு இயக்கத்தின் 2010 லட்சிய திட்டம் "வறுமை என்பது முக்கியமான காரணம் தான், ஆனால், குழந்தைகளின் சத்து பற்றாக்குறைக்கு அது மட்டுமே காரணம் அல்ல. வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களைவிட அதிகமான எண்ணிக்கையில் சத்துக்குறைவால் அவதிப்படுபவர்கள் இருப்பதே சத்துப் பற்றாக்குறை பிரச்சனைக்கு வேறு பல காரணங்களும் உள்ளன என்பதை எடுத்துக்காட்டுகிறது" என்கிறது. இந்த திட்டத்தின் நோக்கம் நல்லது. ஆனால், பிரச்சனையின் முக்கிய ஊற்றுக்களை காண திறன் படைத்ததாக அது இல்லை. உயர்நீதிமன்றம் தற்போது இந்த விஷயத்தை கையில் எடுத்து இருப்பதால் அரசுத்துறைகள் செயல்பட துவங்கி உள்ளன. கர்நாடகாவில் உள்ள அதிகமான குழந்தை இறப்புகளை கண்காணிக்க ஒரு சப்கமிட்டியை அமைக்குமாறு மாநில அரசுத்துறைக்கு உயர்நீதிமன்றம் ஆணையிட்டு உள்ளது. சாவித்திரி நிம்மத்தின் அங்கன்வாடிக்கு திரும்ப வருவோம். அஸ்வினி குர்ணால் தங்களது தட்டுக்களை கேசரிபாத்துக்காக ஏந்திக்கொண்டு உள்ளனர். உதவியாளர் பெரிய கரண்டிகளில் மதிய உணவை பரிமாறுகிறார். அவரது பாடலில் நீங்கள் பல குறைகளை காணலாம்.

அங்கே நிரந்தரமான கட்டிடமோ கரும்பலகையோ கூட இல்லை. பக்கத்தில் உள்ள திறந்த சாக்கடைகள் அங்கன்வாடியின் நிலையை மோசமாக்குகின்றன. சாவரியோடு சேர்ந்த கேசரிபாத் ரெடிமிக்ஸ் என்பது ஒரு நாளுக்கான மிக சிறப்பான ஊட்டசத்தாக இங்குள்ள அநேக குழந்தைகளுக்கு இருக்கிறது. ஒரு ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்த பசவண்ணா எப்படி வளர்வான்?

**ஆதாரம்: *FRONT LINE* (2.12.2011)**

# தனியார்மயத்தை கொழுக்க வைக்கும் கல்வி பெறும் உரிமைச் சட்டம்!

– அப்துல்

2009ஆம் அமைந்த காங்கிரஸ் தலைமையிலான இரண்டாவது ஐக்கிய முன்னணி அரசாங்கம், தனது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான கல்வி பெறும் உரிமைக்கான சட்டத்தை ஏப்ரல் 1, 2010 அன்று அமலுக்குக் கொண்டு வந்தது. 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி பெறும் உரிமையை உத்தரவாதம் செய்வதாக கொண்டு வரப்பட்டுள்ள இந்த சட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசு கடந்த நவம்பர் 8ம் தேதி வெளியிட்டது.

தனியார் பள்ளிகளில் 25 சதவீதம் இடங்கள் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு ஒதுக்கப்பட வேண்டும்' என்பது இந்த சட்டத்தின் முக்கியமான அம்சம். இந்த ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்படும் ஏழைக் குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை அரசே சம்பந்தப்பட்ட பள்ளிக்குக் கொடுத்துவிடுமாம். இப்படி மக்கள் நலனுக்காக தனியார் பள்ளிகள் மீது கட்டுப்பாடு விதிக்கும் சட்டமாக இது சித்தரிக்கப்படுகிறது. 'அரசுப் பள்ளிகள் தரம் குறைந்தவை, தனியார் பள்ளிகள்தான் உயர்தரக் கல்வி தர முடியும்' என்ற பொதுக்கருத்து உருவாக்கப்பட்டுள்ள நிலையில் ஏழை மாணவர்கள் தனியார் பள்ளிகளில் சேர்ந்து படிக்க வழி செய்து தருகிறது என்ற வகையிலும் இது கவர்ச்சிகரமான நடவடிக்கையாக காட்டப்படுகிறது. தமிழ்நாட்டில், தனியார் பள்ளிகளுக்கான கட்டணங்களை ரவிராஜபாண்டியன் கமிட்டி நிர்ணயித்துக்கொடுத்த பிறகு, அதை எதிர்த்து நீதிமன்றத்துக்குப் போன முதலாளிகள், அப்பரிந்துரைகளை குப்பைத் தொட்டியில் வீசி விட்டு தம் விருப்பப்படி கட்டணக் கொள்ளை அடிக்கின்றனர். அதைத் தடுக்க முடியாத ஆட்சியாளர்கள் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி அளிக்க தனியார் பள்ளிகளை கட்டாயப்படுத்துவதற்கு சட்டம் கொண்டு வந்திருப்பதாக சொல்லும்போது அதை கவனமாக அலசிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

1947க்குப் பிறகு இலவச தாய்மொழி வழிக்கல்வி தருவதற்காக அரசுப் பள்ளிகள் கிராமம் தோறும் தொடங்கப்பட்டன. பல குற்றம் குறைகளுடன் இயங்கினாலும், எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி, அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வி என்ற நோக்கத்தை அவை நிறைவேற்றின. 1980களுக்குப் பிறகு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் என்ற பெயர்ப்பலகையுடன் தனியார் பள்ளிகள் காளான்கள் போல முளைத்தன. லாபம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பள்ளிகளில் பலவற்றுக்கு சரியான கட்டிட வசதிகள் கிடையாது. தகுதியுள்ள ஆசிரியர்கள் கிடையாது. ஆனால், அரசுப் பள்ளிகளின் நிர்வாகம் அடுத்தடுத்த அரசுகளின் புறக்கணிப்பின் மூலம் சீரழிக்கப்பட்டு அரசுப் பள்ளிகள் என்றால் தரம் குறைந்தவை, தனியார் பள்ளிகள் மூலம் ஆங்கில வழிக் கல்வி பயில்வதுதான் சிறந்தது என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டது. இதனால் குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்குவது என்பது மக்கள் மீது பெருத்த சுமையாக மாற்றப்பட்டிருக்கிறது. உழைக்கும் மக்கள் கூட பல ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தி குழந்தைகளை மெட்ரிக் பள்ளிகளுக்கு அனுப்புவதை நகர்ப்புறங்களில் பார்க்க முடிகிறது.

இப்படிப்பட்ட நிலையில் அரசுப் பள்ளிகளின் நிர்வாகத்தை மேம்படுத்தி, தேவைப்படும் இடங்களில் புதிய பள்ளிகளைத் திறந்து, குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, எல்லாக் குழந்தைகளுக்கும் தாய்மொழி வழியில் தரமான கல்வி வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதுதான் நியாயமான திட்டமாக இருக்க முடியும். ஆனால், இப்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி பெறும் உரிமைச் சட்டம், இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை சரி செய்து எல்லாக் குழந்தைகளுக்கும் சமமான கல்வி வழங்கும் திசையில் போகவில்லை என்பதோடு, ஏற்றத்தாழ்வுகளை இன்னமும் கெட்டித்துப் போக வழி செய்கிறது. கல்வியை வணிகமயமாக்கி லாபம் சம்பாதிக்கும் நடவடிக்கையாக மாற்றும் தனியார்மயப் போக்கை இந்தச் சட்டம் எந்த வகையிலும் தடுக்கப் போவதில்லை. மாறாக கல்வி தனியார்மயம் என்ற எதார்த்தத்தை அங்கீகரித்து, அதற்கேற்ப மாறிக் கொள்ளுமாறு மக்களுக்கு இது அறிவுறுத்துகிறது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் 5.255 தனியார் ஆரம்பப் பள்ளிகளில் சுமார் 11 லட்சம் மாணவர்களும், 1,716 தனியார் நடுநிலைப் பள்ளிகளில் சுமார் 8 லட்சம் மாணவர்களும் படிக்கிறார்கள். 8ம் வகுப்பு வரையிலான மொத்த மாணவர்களில் சுமார் 29 சதவீதம் இந்த தனியார் பள்ளிகளில் படிக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் கட்டணங்களைக் கட்டுப்படுத்தி அவற்றின் நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்த வகை செய்யவும் அரசுப் பள்ளிகளின்

தரத்தை உயர்த்தவும் முன்வராத இந்தச் சட்டம், அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைத்து ஆரம்பப் பள்ளிக் கல்வியை மேலும் மேலும் தனியார் கைகளில் விடுவதற்கான நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக, அரசு உதவி பெறும் பள்ளிகள், கேந்திரீய வித்யாலயா நவோதயா போன்ற சிறப்புப் பள்ளிகள், அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகள் என்று பல அடுக்குகளாக இருக்கும் பள்ளிக் கல்வி முறையை அங்கீகரித்து பள்ளிக் கல்வியில் இருக்கும் வசதி படைத்தவர்களின் குழந்தைகளுக்கும் ஏழைகளின் குழந்தைகளுக்கும் இடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளை தொடர்ந்து பராமரிக்க வழி செய்கிறது.

இரண்டாவதாக, எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி கிடைக்கும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட–வேயில்லை. தனியார் பள்ளிகளில் 25 சதவீதம் ஏழை மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்வது தனியார் கல்வி முதலாளிகளுக்குக் கட்டாயம் ஏற்படுத்துவது போல தோன்றினாலும் ஏற்கனவே பல்கி பெருகி விட்ட தனியார் பள்ளிகளுக்கு கூடுதல் அங்கீகாரம் அளித்து கணிசமான அரசு நிதியையும் திருப்பி விடுவது இதன் முக்கியமான பணியாக இருக்கப் போகிறது. அரசுப் பள்ளிகள் தரம் குறைந்தவை என்று கருதப்படும் சூழ்நிலையில் ஏழை மக்கள் 25 சதவீதம் இட ஒதுக்கீட்டின் கீழ் தமது குழந்தைகள் தனியார் பள்ளிகளுக்கு அனுப்புவதை பெரிய சலுகையாக நினைப்பார்கள். அதன் மூலம் அரசுப் பள்ளிகள் புறக்கணிக்கப்படுவது இன்னும் தீவிரமாகி அவை முற்றிலும் ஒழிக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்படும். மூன்றாவதாக குழந்தைகளுக்கு ஆறு வயது வரையிலான இளநிலைக் கல்வி, 14 வயதுக்குப் பிறகான உயர் கல்வி தொடர்பான தனது பொறுப்பை முற்றிலும் கைகழுவி விடும் நோக்கத்தையும் இந்தச் சட்டத்தின் மூலம் அரசு வெளிப்படுத்தியிருக்கிறது. உயர் கல்விக்காக பல லட்சம் ரூபாய் செலவு செய்ய முடியாத ஏழை மாணவர்கள் இரண்டாம் தர குடிமக்களாக வேலைச் சந்தையில் விடப்படுவார்கள்.

இந்தியாவின் உயர் கல்வி நிறுவனங்களான ஐஐடிகளுக்கு தன்னாட்சி உரிமை வழங்குவது குறித்து அடுத்து 5 ஆண்டுகளில் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்து எவ்வளவு நிதி திரட்ட முடியும் என்று அவர்கள் சொன்னால், அதற்கேற்ப அவர்களுக்கு கூடுதல் சுய நிர்வாக உரிமை தருவோம்' என்று மனித வளத்துறை அமைச்சர் கபில் சிபல் அறிவித்தார். அதாவது உயர் கல்வி நிறுவனங்கள், தமக்கு நிதி வழங்கும் தனியார் நிறுவனங்களின் விருப்பப்படி செயல்பட விருப்பதைத் தான் தன்னாட்சி என்று சித்தரிக்கிறது அரசு. ‘‘உழைக்கும் வர்க்கத்தினருக்கு அவர்களது வாழ்க்கை நிலைக்கு மேற்பட்ட கல்வி அளிக்கப்படக் கூடாது'' என்று 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்து அரசு கடைப்பிடித்த கொள்கை கூறுகிறது. உழைக்கும் மக்களைப் பொருத்தவரை தற்போதைய சட்டமும் நடைமுறையில் பத்தொன்பதாம் நூற்றாண்டை நோக்கிய பயணமாகவே இருக்கும்.

நான்காவதாக, தனியார் பள்ளிகள் தமது விருப்பப்படி தன்னிச்சையாக நிர்வாகம் செய்து கொள்ளவும், கட்டணங்கள் நிர்ணயித்துக் கொள்ளவும் எந்தத் தடையும் இருக்கப் போவதில்லை. இப்போது இருப்பதைப் போலவே பெற்றோர் பள்ளி நிர்வாகத்துக்கு அஞ்சி நடுங்கி கேட்ட தொகையைக் கட்டிக் கல்வியை வாங்குவது நடைமுறையாகத் தொடரும். ‘தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பள்ளிக் கட்டணங்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள், மத்திய அரசின் கல்வி பெறும் உரிமை சட்டம் அமலுக்கு வந்த பின்னர் செல்லாமல் போய்விடும்' என்று கபில் சிபல் தனியார் பள்ளி உரிமையாளர்களுக்கு உறுதி அளித்துள்ளார்.

மெட்ரிக் பள்ளிகளில் கட்டணத்தை நிர்ணயிக்க சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அவற்றைவிட பல மடங்கு அதிகமான கட்டணங்களை அந்த பள்ளிகள் வசூலித்துக்கொண்டிருப்பதை யாராலும் தடுக் முடியவில்லை என்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அப்பல்லோ மருத்துவமனைக்கு போக முடிவதை மகிழ்ச்சியாக கருதும் மக்கள் அந்த மருத்துவமனை காப்பீடு மூலம் பெறும் பணத்துக்கும் மேல் கூடுதலாக கேட்பதை 'மனமுவந்து' கட்டி விடுவதைப் போல, குழந்தையின் கல்விக்கான கூடுதல் நன்கொடையை சுமக்கவும் மக்கள் தயாராகிக் கொள்ள வேண்டியிருக்கும். 25 சதவீத இடங்களை ஏழைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் சுமையைத் தாங்கிக் கொள்வதால் கூடுதல் கட்டணம் விதிக்க வேண்டியிருக்கிறது என்ற 'தார்மீகக் கடமையை தனியார் பள்ளிகள் 'சுமப்பதால்', அவர்கள் விதிக்கும் கட்டணங்களை சட்ட ரீதியாகவோ, தார்மீக ரீதியாகவோ தட்டிக் கேட்கும் உரிமை யாருக்கும் இல்லாமல் போய்விடும்.

ஐந்தாவதாக, இந்தச் சட்டம் 60 குழந்தைகளுக்கு குறைவாகப் படிக்கும் சுமார் 40 சதவீத ஆரம்பப் பள்ளிகளின் இரண்டு ஆசிரியர், இரண்டு வகுப்பறை முறை தொடர்ந்து நிலவுவதை மாற்றப் போவதில்லை என்று தெரிகிறது. அரசு ஒப்பந்த முறையில் தற்காலிக, பயிற்சி அளிக்கப்படாத துணை அதிகாரிகளை நியமித்துக்கொள்ளவும் இந்தச் சட்டம் வழி செய்கிறது. அரசுப் பள்ளி ஆசிரியர்களை தேர்தல் வேலை, மக்கள்

தொகைக் கணக்கெடுப்பு, நிவாரணப் பணிகள் போன்றவற்றுக்கு அனுப்புவதற்கு இடம் அளிக்கிறது. தனியார் பள்ளியில் குழந்தைகளுக்கு தினமும் பாடம் நடக்கும் போது அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இப்போது இருப்பது போலவே அவ்வப்போது மட்டும் பாடம் நடப்பது தொடரும். பிஎட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் திறமை பற்றி சட்டம் எந்த வரையறையும் செய்யவில்லை.

குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவை என்று கல்வியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தாய்மொழி வழிக் கல்வி வழங்குவதிலிருந்து தன்னை முழுவதும் விடுவித்துக் கொள்ளும் முகமாக ‘சாத்தியமான சூழ்நிலையில் மட்டும் தாய்மொழி வழிக் கல்வி வழங்கப்பட்டால் போதும்’ என்று சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆங்கில வழிக் கல்வி என்ற மாயையின் மூலம் கல்வி வியாபாரிகள் பணம் சம்பாதிப்பதை தொடர்ந்து ஊக்குவித்து, குழந்தைகள் தாய்மொழி வழி கற்பதற்கு இருக்கின்ற வாய்ப்புகளும் ஒழிந்துவிடும்.

வர்த்தகம் தொடர்பான சேவைகள் குறித்த பொது ஒப்பந்தத்தின் (General Agreement on Trade related Services) கீழ் கல்வி, சில்லறை வணிகம், வழிக்கறிஞர்கள் பணி, குடிநீர் வழங்குதல், குப்பை அள்ளுவது, தொலைபேசித் துறை, தபால் துறை, மருத்துவத் துறை என்று பல சேவைகள் வணிகம் சார்ந்த சேவைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. அந்தத் துறைகளில் தலையிட்டு சுதந்திரச் சந்தையின் செயல்பாட்டை பாதிக்க அரசுக்கு உரிமை இல்லை. இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள இந்திய அரசுக்கு கல்வி உள்ளிட்ட சேவைத் துறைகளை தனியார் சந்தைப் போட்டிக்கு திறந்துவிடப்பட வேண்டும் என்ற பன்னாட்டு கடமை விதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகள், மக்கள் போராட்டங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு செயல்படுத்துவதற்கான காலக்கெடுவை நீட்டித்துக் கொள்ளலாமே தவிர அரசு புதிய மருத்துவமனை கட்டுவதோ, பள்ளி கட்டுவததோ, மருந்து செய்வதோ முற்றிலும் நிறுத்தப்பட்டு தனியார்மயமாக்கப்பட்டே தீர வேண்டும்.

உயர் கல்வியையும் தொழிற்கல்வியையும் விற்பனை பண்டமாக மாற்றுவதற்கான ஒரு பரிந்துரையை நமது அரசாங்கம் உலக வர்த்தக நிறுவனத்திடம் சமர்பித்திருக்கிறது. வெளிநாட்டு பல்கலைக் கழகங்களை இந்தியாவில் அனுமதிப்பதற்கான மசோதாவும் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது. சந்தைக்கு ஆதரவாக செயல்படும் அரசுகள் ’மெரிடோகிரசி’ மூலம் ஈவு இரக்கமில்லாத கழித்துக் கட்டலை மக்களிடையே செயல்படுத்த முனைகின்றன. மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உதவிக் கொள்வது என்பது சந்தை போட்டி சூழ்நிலையில் நடக்க முடியாத ஒன்று.

கல்வி பெறும் வாய்ப்புகளை ஜனநாயக முறைப்படி செயல்படுத்தினால் கல்வி விலை பொருளாக இருக்க முடியாது. ஆனால், மூலதனம் தன்னைத் தானே இயற்கையானதாகவும், சுதந்திரமானதாகவும், ஜனநாயகப்பூர்வமானதாகவும் காட்டிக் கொள்கிறது. சுதந்திரச் சந்தை அடிப்படையிலான முதலாளித்துவத்தின் மீது வைக்கப்படும் எந்த விமர்சனத்தையும் ஜனநாயக விரோதமானது என்று முத்திரை குத்தவும் செய்கிறது. சந்தைப் போட்டி, தனியார் மயமாக்கம், தரம் குறைந்த பொதுத் துறை சேவைகள், பணம் படைத்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே ஏற்றத் தாழ்வுகள் எல்லாமே நியாயமானவை. இயல்பானவை என்று மக்களை நம்ப வைக்க வேண்டியிருக்கிறது.

கல்வி நிலையங்கள் வழியாக அரசாங்கம் முதலாளித்துவத்தை இயற்கையானதாக காட்ட முயற்சிக்கிறது. சந்தையின் தேவைகளுக்கு அப்படியே பொருந்தும் மனிதர்களை உருவாக்குவதே மூலதனத்தின் தேவையாக இருக்கிறது. அறிவியல் பூர்வமாக சிந்திக்கும் திறனுக்குப் பதிலாக வணிக நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட கால கட்டத்தில் தேவைப்படும் திறன்களை வழங்குவதே கல்வியின் வேலையாக திட்டமிடப்படுகிறது. நியோ லிபரல் பொருளாதாரவாதிகள் இளைஞர்களை சந்தையில் வேலை செய்யத் தேவைப்படும் விலை பொருளாக ஒரு பக்கமும், சந்தையில் விற்கப்படும் பொருட்களை வாங்கும் நுகர்வோர்களாக இன்னொரு பக்கமும் பார்க்கிறார்கள். இந்த இரண்டிலும் ஏதாவது தடங்கல் ஏற்பட்டால் அவர்கள் ஒரு சமூகப் பிரச்சனையாக மாறி விடுகிறார்கள். 10 சதவீத மக்களை மட்டும் ஆரோக்கியமாகவும், அறிவுள்ளவர்களாகவும், பணக்காரர்களாகவும் வைத்திருப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மன்மோகன், சோனியா கும்பல் அமெரிக்க / பன்னாட்டு ஏகாதிபத்தியங்களின் வழிகாட்டலில் செய்து வருகின்றார்கள். அத்தகைய முதலாளித்துவ சொர்க்கத்தில் பெரும்பான்மை மக்கள் அவர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட கருணை இல்லங்களில் வசித்து, தர்ம பிரபுக்கள் மனமுவந்து போடும் கஞ்சியைக் குடித்துக் கொண்டு, வாய்ப்புக் கிடைக்கும்போது கிடைத்த வேலையைச் செய்து முடித்துவிட்டு மீண்டும் இல்லங்களுக்குத் திரும்பிவிடுவது மட்டுமே விதியாக இருக்கும்.

**ஆதாரம்:** புதிய கலாச்சாரம் (மார்ச் 2012)

# குழந்தைகளின் பரிதாப நிலை

சில அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட்டுகள் பசி, பட்டினி, ஊட்டச்சத்துக் குறைவு தொடர்பாக நடத்திய ஆய்வுகளின் மீதான அறிக்கை ஒன்றை பிரதமர் வெளியிடுகையில், ‘‘ஊட்டச்சத்துக் குறைவு தொடர்பாக நடத்திய ஆய்வுகளின் மீதான அறிக்கை ஒன்றை பிரதமர் வெளியிடுகையில், ‘‘ஊட்டச்சத்துக் குறைவு பிரச்சனை ஒரு தேசிய அவமானம்’’ என்று புலம்பியிருக்கிறார். இது ஒரு தேசிய அவமானம் என்பது உண்மையேயாகும். ஆயினும், இதற்கு முன் பிரதமர் அவர்கள், இந்தியா ‘‘வலுவான பொருளாதார நிலையை’’ எய்திவிட்டது என்று படாடோபமாக அறிவித்தது குறித்தோ, இருபதாண்டுகளுக்கு முன் தன்னால் தொடங்கி வைக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் மாபெரும் வெற்றி பெற்றுவிட்டதாக பீற்றிக்கொண்டது குறித்தோ எதுவும் கூறாமல் தற்போது மவுனம் சாதிக்கிறார்.

பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கை, நம் நாட்டில் ஐந்து வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளில் 42 விழுக்காடு, குறைந்த எடையுடன் காணப்படுவதாகவும், 59 விழுக்காடு தங்கள் வயதுக்குரிய வளர்ச்சியுடன் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆய்வானது நாட்டில் 2011ஆம் ஆண்டில் கிராமப்புறங்கள் நிறைந்த, நாட்டின் ஒட்டு மொத்த குழந்தைகளில் சுமார் 20 விழுக்காட்டினரை உள்ளடக்கியுள்ள 112 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டவைகளாகும். பிரதமர் இவ்வாறு அதிர்ச்சிதரத்தக்க செய்திகளை வெளிப்படுத்திப் பேசியுள்ள போதிலும், இம்முடிவுகள் புதியவை அல்ல. இருபதாண்டுகளுக்கு முன் இன்றைய பிரதமரும் அன்றைய நிதி அமைச்சருமாகிய மன்மோகன் சிங் அவர்களால் தொடங்கப்பட்ட நவீன தாராளமயப் பொருளாதார ’சீர்திருத்தங்கள்’ நாட்டு மக்கள் மத்தியில் சமச்சீரின்மையை, ஏற்றத்தாழ்வை அதிகப்படுத்தி, இருவித இந்தியாவை உருவாக்கவே இட்டுச் சென்றுள்ளன என்று அரசாங்கத்தின் ஆய்வுகள் பல ஏற்கெனவே கண்டறிந்தள்ளன. அவ்வாறு வெளியிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் ஆய்வுகள் சிலவற்றை இப்போது நாம் ஆராய்வோம்.

நாட்டின் வறுமைநிலை குறித்து பல்வேறு புள்ளிவிவரங்களுக்கிடையே பல்வேறு விதமான விவரங்கள் இருந்தபோதிலும், சமீபத்தில் திட்டக் கமிஷன் சார்பில் வெளியிடப்பட்டுள்ள மனிதகுல வளர்ச்சி அறிக்கை (Human Develoment Report) யில், நம் மக்களில் சுமார் 31 கோடி பேர் அரசாங்கத்தின் அதிகாரப் பூர்வமான வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறது. 1973–74க்குப் பின், வறுமைக்கோட்டுக்குக் கீழானோர் எண்ணிக்கை வெறும் ஒரு கோடியே 90 லட்சம் மட்டுமே குறைந்திருக்கிறது. வறுமை குறித்து சரியான அளவில் விவரங்கள் சேகரிக்கப்படவில்லை என்பது ஒரு புறமிருக்கட்டும், அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின்படியே, ஒருவர் உட்கொள்ள வேண்டிய உணவின் அளவு (அதாவது குறைந்தபட்ச கலோரிகள் மற்றும் புரதச் சத்து நிறைந்த உணவு உட்கொள்ளுதல் என்பது) 1983க்கும் 2005க்கும் இடையே கிராமப்புறங்களில் 8 விழுக்காடும், நகர்ப்புறங்களில் 3.3 விழுக்காடும் வீழ்ச்சி அடைந்திருக்கிறது. பசி பட்டினியில்லாத மாநிலம் என்று எதுவுமே இல்லை என்று இது தொடர்பான அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் மூன்று வயதுக்குக் குறைவான குழந்தைகளில் பாதிக்கு மேற்பட்டவைகள் ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகளாகும். இது ஆப்ரிக்க நாட்டின் நிலைமையைவிட மோசமானதாகும். நாட்டின் குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டவைகளுக்கு தடுப்பூசிகள் முழுமையாகப் போடப்படுவதில்லை. இதன் விளைவாக இவை, முற்றிலுமாக தடுக்கப்படக்கூடிய வியாதிகளைக் கூட இவற்றால் தடுக்க முடியாமல், நோய்க்கு இரையாகி இறக்கும் அவலநிலை இன்னமும் இருந்து வருகிறது. நாட்டில் சுகாதாரத்திற்காக அரசு செலவிடும் மொத்த செலவினம் என்பது, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விழுக்காட்டின் அடிப்படையில், பார்த்தோமானால், ஒட்டுமொத்த ஆப்ரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்படும் செலவினத்தைவிடக் குறைவானதாகும். நாடு சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகள் கழிந்தபின்னரும் நம் நாட்டின் துப்புரவு நிலைமைகள் மிகவும் வேதனையளிக்கக்கூடிய விதத்திலேயே இருக்கின்றன. நாட்டில் உள்ள குடும்பங்களில் ஐம்பது விழுக்காட்டிற்கும் மேற்பட்டவை, கழிப்பறை வசதிகளின்றியே இருக்கின்றன.

தேசிய குடும்ப சுகாதார ஆய்வு 2 (National Family Health Survey-2) நடத்தப்பட்டு ஆறு ஆண்டுகள் கழித்து, தேசிய குடும்ப சுகாதார ஆய்வு–3 நடத்தப்பட்டிருக்கிறது. ஆய்வு–2இன் போது இருந்த நிலைகைளைவிட தற்போது ஆய்வு–3இன் போது உள்ள நிலைமைகள் மிகவும் வேதனையளிக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக்கின்றன. 6 மாதங்களுக்கும் 35

மாதங்களுக்கும் இடைப்பட்ட வயதில் உள்ள குழந்தைகளில் ரத்தசோகை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 74.2 விழுக்காட்டிலிருந்து 79.2 விழுக்காடாக அதிகரித்திருக்கிறது. 15 வயதுக்கும் 49 வயதுக்கும் இடையே மணமாகியுள்ள பெண்களில் ரத்தசோகைக்கு ஆளானோர் எண்ணிக்கை 51.2 விழுக்காட்டிலிருந்து 56.2 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. இதே வயதில் உள்ள கர்ப்பிணிப் பெண்களில் ரத்தசோகைக்கு ஆளானோர் எண்ணிக்கை 49.7 விழுக்காட்டிலிருந்து 57.9 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. தேசிய குடும்ப சுகாதார ஆய்வு–3 மேற்கொண்ட ஆய்வின்படி, மூன்று வயதுக்குக் குறைவான குழந்தைகளில் 38.4 விழுக்காட்டுக் குழந்தைகள், தாங்கள் இருக்க வேண்டிய வளர்ச்சியைவிட குறைவாகவே இருக்கின்றனர் என்றும். 46 விழுக்காட்டுக் குழந்தைகள் குறைந்த எடையுடன் காணப்படுகின்றனர் என்றும், 79.2 விழுக்காட்டுக் குழந்தைகள் ரத்த சோகையுடன் காணப்படுகின்றனர் என்று கூறியிருக்கிறது. இதுதான் நம் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் இன்றைய நிலையாகும்.

நம் குழந்தைகளின் சுகாதாரம் என்பது நம் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டவை என்று அனைத்து ஆய்வுகளும் உறுதிப்படுத்தியுள்ள உண்மையாகும். ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் உயர்ந்து கொண்டே இருப்பதாக பீற்றிக்கொண்டிருந்தாலும், தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு (NSSO-National Sample Survey Organisation), நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் விகிதம் 2007ம் ஆண்டில் 2.8 விழுக்காடாக இருந்தது, 2009–10ஆம் ஆண்டில் 9.4 விழுக்காடாக அதிகரித்திருக்கிறது என்று மதிப்பிட்டிருக்கிறது. வேலையில் உள்ளவர்களில் கூட, 16 விழுக்காட்டினர்தான் முறையான ஊதியத்துடன் வேலையில் உள்ளவர்கள். மற்றவர்களில் 49 விழுக்காட்டினர் சுயவேலை பார்ப்பவர்கள் (அதாவது வீதிகளில் சுற்றி பொருள்களை விற்போர், சாலையோரங்களில் பொருள்களை விற்போர் போன்று சமூகத்தின் அடித்தட்டில் இருப்பவர்கள்) மற்றும் 39 விழுக்காட்டினர், அன்றாடக்கூலித் (கேசுவல்) தொழிலாளர்களாவார்கள். ஊட்டச்சத்துக் குறைவுடன் எடை குறைந்து காணப்படும் குழந்தைகள் 2004ஆம் ஆண்டில் 53 விழுக்காடாக இருந்தது, 2011இல் 42ஆகக் குறைந்துவிட்டது என்பது உண்மையானாலும், இவ்வாறு 42 விழுக்காட்டுக் குழந்தைகள் எடை குறைவுடன் இருப்பது குறித்து, பொறுப்புள்ள பிரஜைகளைக் கவலைக்குள்ளாக்கி இருக்கிறது என்றும், இதனை எவரும் ஏற்க முடியாது என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

இதில் வேடிக்கை விநோதம் என்னவெனில், பிரதமர்தான் இந்தியாவின் ஊட்டச்சத்து சவால்களுக்கான தேசிய கவுன்சிலின் (National Council on India's Nutrition Challenges) தலைவராவார். நாட்டில் ஊட்டச்சத்துக் குறைவுடன் காணப்படும் குழந்தைகள் பிரச்சனையை சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS-Integrated Child Development Services) என்னும் அமைப்பினை நாடு முழுதுக்கும் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இதுவும் கூட அரசாங்கம் தானாக முன்வந்து விரும்பி, செய்திடவில்லை. மாறாக, உச்சநீதிமன்றத்தின் கட்டளையின்படி அரசால் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும். அவ்வாறு உச்சநீதிமன்றம் கட்டளையிட்டிருந்த போதிலும்கூட, பிரதமரின் தலைமையில் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மேற்பார்வையாளர்கள் (ICDS supervisors) பணியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு நாடு முழுதும் இன்னமும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இத்திட்டத்தை அமல்படுத்துவதற்கு மிகவும் முக்கியமானது அங்கன்வாடி மையங்களாகும். நாடு முழுதும் அமைக்கப்பட வேண்டிய 14 லட்சம் அங்கன்வாடி மையங்களில், ஒரு லட்சத்து 10 ஆயிரம் மையங்கள் இன்னமும் செயல்படுத்தப்படாமல் இருந்து வருகின்றன. செயல்படும் அங்கன்வாடி மையங்களிலும் மிகப் பெரும்பாலானவற்றின் நிலைமைகள் மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளன. பீகார் மாநிலத்தின் 90 விழுக்காட்டிற்கும் அதிகமான அங்கன்வாடி மையங்கள் கட்டிட வசதி எதுவுமின்றி திறந்த வெளியில் இயங்கி வருகின்றன. பாதிக்கும் மேற்பட்ட மையங்களில் கழிவறை வசதிகளோ, குடிநீர் வசதிகளோ கிடையாது. அரசாங்கத்தின் தாரக மந்திரமான பொது–தனியார்–ஒத்துழைப்பு (PPP-Public Private Partnership) திட்டப்படி, இம்மையங்களுக்கான உணவு விநியோகம் தனியாரால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது எவ்வித ஒழுங்குமுறையுமின்றியும், தரப்படும் உணவின் தரம் மற்றும் அளவு குறித்து எவ்வித சரிபார்த்தலுமின்றி பெயரளவிலும் மிகவும் மோசமான முறையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

அங்கன்வாடி மையங்களின் பரிதாபகரமான நிலைமைகளுக்கு எதிராகப் பல இடங்களில் மக்கள் கிளர்ச்சிகள் நடைபெற்றுள்ளபோதிலும், இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் பலமுறை விவாதங்கள் நடைபெற்றுள்ள போதிலும், அங்கன்வாடி ஊழியர்களின் நிலைமைகளும் மிகவும் வேதனையளிக்கக்கூடிய விதத்திலேயே உள்ளன. அவர்களின் பணி நிலைமைகள் மிகவும் மனிதாபிமானமற்ற முறையிலேயே இன்றளவும் இருந்து வருகின்றன. மாத ஊதியமாக அங்கன்வாடி

ஊழியர்களுக்கு 1500 ரூபாயும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு 750 ரூபாயும் அளிக்கப்படுகிறது. நாட்டின் எதிர்காலமாக விளங்குகின்ற குழந்தைகளில், ஊட்டச்சத்துக் குறைவாக உள்ளவற்றைக் கண்டறிந்து, அவர்களைப் பேணி வளர்த்திடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்களின் பரிதாப நிலை இவ்வாறுள்ளது. ஆயினும், அரசாங்கம் இத்துறையை உதாசீனப்படுத்துவது இன்னமும் தொடர்கிறது. நாடு முழுதும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து வளர்ச்சிப் பணிகள் திட்டத்தை விரிவாக்கிடத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் இன்னமும் செய்திடவில்லை. நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே பொது சுகாதாரத்திற்காக ஆட்சியாளர்கள் செலவு செய்கிறார்கள். உண்மையில், பொது சுகாதாரத்திற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ள அற்பத்தொகையான 22 ஆயிரத்து 300 கோடி ரூபாயைவிட, நாட்டில் நடைபெற்ற 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில், சம்பந்தப்பட்டுள்ள தொகையானது எட்டு மடங்கிற்கும் அதிகமாகும்.

நாட்டில் ஊட்டச்சத்துக் குறைவால் வாடும் குழந்தைகளின் நிலைமையை மாற்ற வேண்டும் என்பது குறித்து பிரதமர் உண்மையிலேயே அக்கறையுள்ளவராக இருந்தால், பின் அவர் அடிப்படை சுகாதார நலன்களை அனைவருக்குமானதாக மாற்றிட உரிய நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். இதற்கு நம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 3 விழுக்காடு சுகாதார நலனுக்கான திட்டங்களுக்காக ஒதுக்கிட வேண்டும். நம் அரசாங்கத்திற்கு நியாயமாக வரவேண்டிய வரி வருவாய்களில் இதைவிட அதிகமான அளவுத் தொகை தற்போது அரசாங்கத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அரசாங்கம் தள்ளுபடி செய்திருக்கிற தொகை, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 14 லட்சத்து 28 ஆயிரத்து 28 கோடி 5 ரூபாயாகும். இதில் 3 லட்சத்து 63 ஆயிரத்து 875 கோடி ரூபாய் அளவிற்கு கார்ப்பரேட்டுகளுக்கும் பணக்காரர்களுக்கும் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. எனவே, பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக வளப்படுத்திடும், ஏழைகளை மேலும் ஓட்டாண்டிகளாக மாற்றிடும், ஆட்சியாளர்கள் தற்போது கடைப்பிடித்து வரும் நவீன தாராளமய 'சீர்திருத்தங்களை' குழிதோண்டிப் புதைத்திடாமல், நாட்டின் நலனிலும், நாட்டு மக்களின் நலவாழ்விலும் முன்னேற்றம் எதனையும் உருப்படியாகச் செய்திட முடியாது. நாட்டிலுள்ள ஏழை – பணக்காரர்கள் மத்தியில் இடைவெளியை அதிகப்படுத்திடும் ஆட்சியாளர்களின் கொள்கை கைவிடப்பட வேண்டியதாகும். பணக்காரர்களுக்கு சலுகைகள் என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய் கொட்டுவது கைவிடப்பட்டு, நாட்டிற்கு மிகவும் தேவைப்படுகின்ற கட்டமைப்பு வசதிகளைக் கட்டுவதற்கும், அதன் மூலம் பெரிய அளவில் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும் வழி செய்யக்கூடிய விதத்தில் அத்தொகைகளை பொது முதலீடுகளில் உபயோகப்படுத்திட வேண்டும். நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தையும், அதன் மூலம் சிறந்ததோர் இந்தியாவை உருவாக்குவதற்கான விதத்தில் அவர்களது நல வாழ்வையும் மேம்படுத்துவதற்கான ஒரே வழி இதுவேயாகும்.

**ஆதாரம்** : தீக்கதிர் 17.1.2012

*Translated from People's Demography*

## இந்தியாவில் 47 சதவீத சிறுவர்களுக்கு 18 வயதுக்குள் திருமணம்

இந்தியாவில் 47 சதவீத சிறுவர்களுக்கு 18 வயதுக்குள் திருமணம் நடந்து விடுகிறது என்று யுனிசெப் ஆய்வு தெரிவிக்கிறது. ஐ.நா. குழந்தைகள் வளர்ச்சி நிதி நிறுவனம் (யுனிசெப்), 'உலக குழந்தைகளின் நிலைமை 2012 என்ற தலைப்பில் ஒரு ஆய்வு நடத்தி, அறிக்கை வெளியிட்டுள்ளது. இதில், இந்தியாவில் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழைகளின் மோசமான நிலை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபற்றி அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இந்தியாவில் நகர்ப்புறங்களில் மொத்தம் 50,000 குடிசைப் பகுதிகள் உள்ளன. இவற்றில் 9 கோடியே 70 லட்சம் பேர் வசிக்கின்றனர். இதில் 70 சதவீதம் பேர், மகாராஷ்டிரா, ஆந்திரா, மேற்கு வங்கம், தமிழ்நாடு மற்றும் குஜராத்தில் உள்ளனர். குறிப்பாக, 35 சதவீத குடிசைவாசிகள் மகாராஷ்டிரா மாநிலத்தில்தான் உள்ளனர்.

வரும் 2026ம் ஆண்டுவாக்கில், இந்திய மக்கள்தொகையில் 40 சதவீதம் பேர் நகர்ப்புறங்களில்தான் இருப்பார்கள். எனவே, நகர்ப்புறங்களில் உள்ள ஏழைகளின் பிரச்சனைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இதில் அரசுகள் கவனம் செலுத்த வேண்டும். நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு உணவு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதனால், அவர்கள் எதிர்காலத்தில் எதிர்மறையான விளைவுகளுக்கு ஆட்படுகின்றனர்.

அதேபோல், இந்தியாவில் 47 சதவீத சிறுவர்களுக்கு 18 வயதுக்குள் திருமணம் நடந்து விடுகிறது. அதிலும் 18 சதவீதம் பேருக்கு 15 வயதுக்குள் திருமணம் நடக்கிறது. பெண் குழந்தைகளை பொருத்தவரை, 15 முதல் 19 வயதுக்கு உட்பட்டவர்களில் 30 சதவீதம் பேருக்கு திருமணம் நடந்துவிடுகிறது. பங்களாதேஷ் (48%), மத்திய ஆப்ரிக்க குடியரசு (59%), கினியா (36%) ஆகிய நாடுகளில்தான் இந்த விகிதம் அதிகமாகக் காணப்படுகிறது. இந்த பட்டியலில் இந்தியாவும் நெருங்கி வருகிறது. இவ்வாறு அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்படுகிறது.

**ஆதாரம்:** தினகரன் (2.3.2012)

# பட்ஜெட்டில் குழந்தைகளுக்கான பங்கு 5.3 சதவீதம்

மத்திய பட்ஜெட் ஒதுக்கீட்டில் 2012–13ல் குழந்தைகளுக்கான ஒதுக்கீடு 5.3 சதவீதம் ஆகும். இது கடந்த 2011–12 ஒதுக்கீட்டைவிட 0.3 சதவீதம் அதிகம். இது பணவீக்க விகிதமான 6.6 சதவீதத்தை அடிப்படையாய் வைத்து உருவாகி உள்ளது. இந்த உயர்வு என்பது வளர்ச்சித் திட்டங்களில் வந்த உயர்வு ஆகிய 66.2 சதவீதம் மற்றும் சுகாதாரத்துறை உயர்வு 29.7 சதவீதத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். எப்படி இருந்த போதிலும் பாதுகாக்கப்பட வேண்டியவைகளுக்கு ஒதுக்கப்பட்டது. மிகக் குறைவுதான் என்று பட்ஜெட் பற்றி பகுத்தாய்வு செய்யும் குழந்தைகள் உரிமைக்குழு சொல்கின்றது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குழந்தைகளைப் பாதுகாப்பது பற்றி உணரப்பட்டும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை 12வது திட்டப் பணிக்குழு அறிக்கையில் இது மீண்டும் வலியுறுத்தப்பட்டும் கூட 2011–12ல் 18 சதவீத வீழ்ச்சியை கண்டுள்ளது.

கல்வித்துறைக்கான ஒதுக்கீட்டில் கூட கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 0.1 சதவீதம் குறைவாகத்தான் இருக்கிறது. இது இந்தியாவிலுள்ள குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டோர் பள்ளி செல்லாத நிலை அல்லது எட்டாவது வகுப்பு கூட முடிக்கும் முன்னரே இடை நின்று வருகின்ற இன்றைய நிலைமையில் நிகழ்ந்திருக்கின்றது. இருந்த போதிலும் குழந்தைகளுக்கான பட்ஜெட் என்ற விதத்தில் வரவேற்கத்தக்கதுதான்; மொத்த பட்ஜெட்டில் 3.6 சதவீதம் மற்றும் குழந்தைகள் ஒதுக்கீட்டில் 67 சதவீதம் இதற்காகப் போக போகின்றது என்ற விசயத்தில் பார்க்கும்போது என்று HAQ சொல்கின்றது.

இந்தியாவின் ஊட்டச் சத்து சம்பந்தப்பட்ட சவால்களை சந்திக்கின்ற பிரதம மந்திரியின் தேசியக் கவுன்சில் சிபாரிசின்படி இந்தியக் குழந்தைகளில் 46 சதவீதக் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்போது அதில் கவனம் செலுத்தி 200 மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்திருப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆனால், இதில் ஆச்சரியமான விசயம் என்னவென்றால் இந்த அதிகப்படியான ஒதுக்கீடு எங்கிருந்து பணம் பெறப்போகின்றது என்பதில்தான். நகர் நலம் பற்றிய கவன ஈர்ப்பு மக்களின் ஆரம்ப சுகாதாரத்திற்கு அதிக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்ட போதிலும் அதற்காக பட்ஜெட்டில் தனியான ஒதுக்கீடு என்று எதுவும் காணப்படவில்லை என்று பட்ஜெட் பற்றி ஆய்வு செய்பவர்கள் கூறுகின்றார்கள்.

பாதுகாப்பு செய்யப்பட வேண்டிய துறைக்கு ஒதுக்கீட்டில் குறைவு என்பது ஏமாற்றமானதுதான். ஏனென்றால், 11ம் திட்டத் திட்டமிடுதலில் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டபின் இத்துறைக்கு அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டுதான் வந்துள்ளது. அந்த ஒதுக்கீடு எவ்வளவு குறைவானதாக இருந்தபோதிலும் அதுகூட இப்போதைய பட்ஜெட்டில் இல்லை என்பது ஏமாற்றமே. 64.6 சதவீத உயர்வு ஒருங்கிணைந்த குாந்தை வளர்ச்சித் திட்டத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே இருந்த 186.40 கோடியிலிருந்து 400 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான–தொன்றாகும். ஏனெனில், 11வது திட்டம் பணி முடிவடையும் இக்காலகட்டத்தில் கூட பல மாநிலங்களில் இது செயல்படுத்தப்படவில்லை.

குழந்தைகளை தத்துக் கொடுப்பதில் சீரமைப்பு செய்வதாக உறுதி அளித்துள்ள அரசு 74.6 சதவீத குறைப்பை பட்ஜெட் விசயத்தில் கடைப்பிடித்திருப்பது ஏமாற்றமளிக்கிறது என்று HAQவின் ஆய்வு கூறுகின்றது. மிகப் பெரிய அளவில் குழந்தைகள் கடத்தப்படுகின்றனர் என்பது ஊர்ஜிதமாகி இருக்கின்ற நிலையில் இந்த பட்ஜெட் குறைப்பு கவலைக்குரியது. மேலும் இதில் உடனடி சட்ட ஒருங்கிணைப்பு தேவைப்படுகின்றன. மொத்த பட்ஜெட் வளர்ச்சிப் பணிக்கு 66.2% உயர்வு கிட்டியது ஒருங்கிணைந்த குாந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கிடைத்திருக்கிறது. எப்படி இருந்த போதிலும் இந்த திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் மற்றும் சிறுபான்மையினர் தலித்களின் நலம் புறந்தள்ளப்பட்டிருக்கிறது.

29.7 சதவீத உயர்வு நலத்துறைக்கு இருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் பழைய ஒதுக்கீடுகள் மிகக் குறைவானவை. இந்த உயர்வு எப்படி வந்ததென்று பார்த்தால் 22 சதவீதம் தடுப்பூசி மற்றும் போலியோ தடுப்பு மருந்து உற்பத்தியினால் என்று அறியலாம். போலியோ ஒழிப்பிற்காக 32 சதவீதம் உயர்வு கொண்டு வரப்பட்டிருக்கிறது. பட்ஜெட் மற்றும் அரசு நிர்வாகப் பொறுப்புக்கான மையம் சொல்வது என்னவென்றால், UPA-II அரசாங்கம் தொழில்துறை தலைவர்களுக்கு 'சிக்னல்' கொடுத்திருக்கிறார்கள்.

**இதன் தொடர்ச்சி 21ம் பக்கத்தில்**

# குழந்தைப் பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்விக்கான கொள்கை முன்மொழியப்பட்டது

அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு முழுமையான வளர்ச்சியைத் தரும் நோக்கில் ஒருங்கிணைந்த சேவைகளை வழங்க குழந்தை பிறப்பதற்கு முன்பான காலம் முதல் ஆறு வயதுக்கான காலகட்டம் வரைக்குமான தேசிய குழந்தைப் பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்விக்கான கொள்கைளை உருவாக்கும் முன்மொழிவை அரசாங்கம் உருவாக்கி உள்ளது. ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சிக்குமான பலமான அடித்தளம் அமைவதை உறுதிப்படுத்துவதற்கான பாதையை அது உருவாக்கும். இந்தியாவில் ஆறுவயதுக்குட்பட்ட குழந்தைகள் 158.7 மில்லியன் (15 கோடியே 87லட்சம்) பேர் இருக்கின்றனர்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) திட்டத்தை மறுகட்டமைப்பு செய்வதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்தும். இயல்பான பள்ளி செல்வது உறுதிப்படுத்துவதை நோக்கி எளிதாக மாறிச் செல்வதற்காக குழந்தைப் பருவத்துக்கு முந்தைய கல்வியை கல்வி உரிமைச் சட்டத்தோடு இந்தத் திட்டம் ஒருங்கிணைக்கும். தரமான சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக எல்லா சேவை நிறுவனங்களும் மாநில அரசுகளோடு பதிவு செய்து கொள்ளவேண்டும்.

குழந்தைப் பருவத்துக்கு முந்தைய பருவம் என்பது ஒரு மனிதரின் வாழ்வில் மிக நெருக்கடியானது என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அப்போது வளர்ச்சியின் விகிதம் என்பது மிக அதிகமாக இருக்கும். மனித வளர்ச்சிக்கும் வாழ்நாள் முழுவதற்கும் கற்றுக் கொள்வதற்கானதுமான அடித்தளங்கள் அப்போதுதான் போடப்படுகின்றன, வாழ்நாள் முழுவதுக்குமான கற்றுக்கொள்ளுதல் மற்றும் நடத்தைகள் மற்றும் மனநலம்–உடல்நலத்தை பாதிக்கக்கூடியதாக மூளை வளர்ச்சியின் ஆரம்ப ஆண்டுகள் இருக்கின்றன என்பதற்கான விஞ்ஞான ஆதாரங்கள் வந்து கொண்டே உள்ளன.

பல்வேறு சேவை நிறுவனங்கள் இருப்பதால் தற்போதைய பிரிவுகளின்படி எவ்வளவு குழந்தைகள் இத்தகைய சேவைகளை பெறுகின்றனர் என்ற நம்பகமான தகவல் கிடைக்காமல் உள்ளது. எவ்வளவு பேருக்கு இத்தகைய சேவைகள் கிடைத்தன என்பதன் அடிப்படையில் பயன்பெற்றோர்களை பிரித்தும் பார்க்க முடியாது. ஆறு வயதுவரையிலான 158.7 மில்லியன் குழந்தைகள் இந்த பிரிவில் வருகின்றனர். ஏறத்தாழ 75.7 மில்லியன் குழந்தைகள் (48 சதவீதம்) ICDS திட்டத்தில் பயன்பெறுவதாக சொல்லப்படுகிறது, தனியார் பள்ளிகளிலும் கூட கணிசமான குழந்தைகள் இருப்பதை விரிவான உத்தேச கணக்குகள் தெரிவிக்கின்றன. தனியார் தொண்டு நிறுவனங்களிடமும் ஓரளவு குழந்தைகள் உள்ளனர், ஆனால் இங்கெல்லாம் தகவல்கள் கிடைக்கவில்லை.

இத்தகைய பலதரப்பட்ட நிறுவனங்கள் நடத்துகிற அதிகாரபூர்வமானதாக இல்லாத குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்வியின் தரம், சமமானதாக இல்லை. காளான்களை போல பெருகிவரும் கல்வித் திட்டங்களை குறைந்தபட்சமாக அணுகுதல் முதலாக இவை வேறுபடுகின்றன. குழந்தைப் பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்வி பற்றிய கருத்துருவை போதுமான அளவு புரிந்து கொள்ளாதது, அதன் தத்துவம் மற்றும் முக்கியத்துவத்தை அதன் மற்ற பங்காளர்கள் புரிந்து கொள்ளாமை என்பதன் ஒட்டுமொத்த வெளிப்பாடே இது. அமைப்பில் உள்ள அமைப்புரீதியான தகுதிக் குறைபாடுகளோடு மற்றும் தரம் இல்லாமையோடு இணைகிறது. சரிசெய்யும் விதிகளும் நிர்வாக அமைப்பும் குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்வி பற்றிய அடிப்படையான பகுதியை புரிந்து கொள்ள இயலாமல் இருப்பதை போலவே பிரச்சனையை பெரிதாக்கி உள்ளன. அதனையும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுக்கான மத்திய அரசின் அமைச்சகம் முன்வைத்துள்ள இந்த கொள்கைக்கான நகல்திட்டம் கவனத்தில் கொண்டுள்ளது.

குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்வி பற்றிய கொள்கை அனைத்து குழந்தை பருவத்துக்கு முந்தைய பராமரிப்பு மற்றும் கல்வி திட்டங்கள் மற்றும் அதன் தொடர்பான எல்லா பகுதிகளிலும் உள்ள பொதுத்துறை, தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களின் சேவைகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கிறது. அங்கன்வாடிகள், விளையாட்டு பள்ளிகள், முன்பள்ளிகள், நர்சரி பள்ளிகள், கிண்டர்கார்டன்கள், தயார்நிலைக்கான பள்ளிகள், பால்வாடிகள் மற்றும் குழந்தைகளுக்கு வீடு சார்ந்த பராமரிப்பு ஆகிய அனைத்துவித சேவைகளையும் உள்ளடக்கியதாக அது இருக்கும்.

குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்வியை பிரதானமாக பொதுத்துறையில் உள்ள ICDS திட்டம் மூலமாக அனைவருக்கும் பொதுவானதாக மாற்ற இந்த கொள்கை விரும்புகிறது. மற்ற சேவைப்பிரிவுகள் இதர அமைப்புகள் மூலமாக செய்யப்படும். அங்கன்வாடிகள் உயிர்ப்பான, குழந்தைகளுக்கு பிடித்தமான, குழந்தைபருவத்துக்கு முன்னதான வளர்ச்சி மையமாக மாற்றி அமைக்கப்படும். போதுமான கட்டமைப்புகள், ஆதாரவளங்கள், குழந்தைப் பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்வி பற்றிய தொடர்ச்சியான செயல்பாட்டை உறுதிப்படுத்துவதும், முழு வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தில் குழந்தை தொடர்பான நல்ல விளைவுகளை தருவதை உறுதிப்படுத்துவதும், மையத்தை மாற்றுவதன் நோக்கம்.

குழந்தைக் காப்பகங்களை உள்ளடக்கியதாக அங்கன் வாடி மையங்களை கூடியதாக மாற்றுவது, மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பரஸ்பர தொடர்புக்கான சூல், திட்டமிட்ட, தூண்டும், கற்றுக் கொள்ளும் சுற்றுப்புறம் கொண்டதாக மாற்றுவது ஆகியவையும் துவக்கப்படும்.மாற்றுதிறனாளிகளாக உள்ள குழந்தைகள் வரை இந்ததிட்டம் போய்ச்சேரும். தொண்டு நிறுவனங்கள், சமூகங்கள்,குடும்பங்கள் கூட இந்த சேவைகளை அளிப்பதில் சோதனை மாதிரிகளாக பரிசோதிக்கப்படுவார்கள்.

குழந்தைப்பருவத்துக்கு முந்தைய பராமரிப்பு மற்றும் கல்வி, தரமாக, குழந்தைகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய அடிப்படையான தரக்கட்டுப்பாடுகள் மற்றும் குறிப்பானவை, அரசுத்துறை, தனியார்துறை மற்றும் தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். அடிப்படையான தரமான சேவைகள் மற்றும் தரமான நல்ல விளைவுகளை உத்தரவாதப்படுத்துவதற்காக குழந்தைப் பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்விக்கான ஒரு ஒழுங்குமுறை வடிவம் உருவாக்கப்படும். இது தொடர்பான சேவைகளை வழங்கிக் கொண்டு இருக்கும் நிறுவனங்கள் அனைத்தும் முன்னேற்றகரமாக தேசிய அளவில் பரிணமிக்க செய்யப்படும். அடுத்த ஐந்தாண்டுகளில் மாநில அரசுகளால் இது நிறைவேற்றப்படும்.

ஒரு முன்னேற்றகரமான, பொருத்தமான, குழந்தைப் பருவத்துக்கு முந்தைய பராமரிப்பு மற்றும் கல்விக்கான தேசிய பாடத்திட்டம் உருவாக்கப்படும். முன்பருவக் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான, விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட, சோதனை அடிப்படையிலான, குழந்தைக்குப் பிடித்தமான விதிமுறையை இது உயர்த்திப் பிடிக்கும்.

## குழு

பலதுறைகள் மற்றும் அரசு முகமைகளின் ஒத்துழைப்பை நிலைநிறுத்துவதற்காக வல்லுனர்கள் கொண்ட குழு ICDS இயக்கத்துக் கீழாக அமைக்கப்படும். இது முதலில் செயற்குழுவாக இருக்கும், குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்விக்கான தேசிய கவுன்சிலாக மாற்றப்படும். அடுத்ததாக அதனோடு இணைந்து பணியாற்ற மாநில அளவிலும், பிறகு மாவட்ட அளவிலும் கவுன்சில்கள் அமைக்கப்படும். தேசிய கவுன்சில் என்பது குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்விக்கான கொள்கைக்கான வழிகாட்டல்களை வழங்கும்.அதன் அமலாக்கத்தை மேற்பார்வையிடும். குழந்தைப்பருவத்துக்கு முந்திய பராமரிப்பு மற்றும் கல்விக்கான தேசிய திட்டத்துக்கு பொருத்தமாக அதன் திட்டங்களை தொடர்ச்சியாக வைத்திருக்கும் பணியையும் அது செய்யும்.

**ஆதாரம்:** *The Hindu* 18.3.2012

**பட்ஜெட்டில் குழந்தைகளுக்கான பங்கு 5.3 சதவீதம் கட்டுரையின் தொடர்ச்சி...**

அது என்னவென்றால் கடன் பெறுவதில் குறைபாடு கடைப்பிடிக்கப்பட்டாலும் அதிக வரி வசூலிப்பதில் வரும் ஆண்டுகளில் தடைவிதிக்கப் போவதில்லை என்று இந்த நிகழ்வு போக்கில் மீண்டும் ஒரு வாய்ப்பான இணைந்து செய்திடும் வளர்ச்சித்திட்ட வாய்ப்பை இழக்கின்றது.

### பெண்களுக்கு பெரும் வாய்ப்பில்லை: AIDWA

இந்திய ஜனநாயக மாதர் சங்கம் (AIDWA) சமீபத்திய பட்ஜெட்டை "தூக்கிப் போட்டதோடு" பெண்களை பாதுகாப்பதற்காக எதுவுமில்லை என்பதால் பெரிய தோல்வியாகும் என்றும் கண்டனம் செய்துள்ளது. பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்த காலகட்டத்தில் வெளியாகின்ற இந்த பட்ஜெட் வியாபார நோக்கில் நடைபெறும் அமைப்புகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவாக இருக்கிறதேயன்றி பொது மக்களுக்கும் உழைக்கும் வர்க்கத்துக்கும் விலை உயர்வு மற்றும் பணவீக்கத்துக்கும் உதவி செய்வதாக இல்லை. இந்த பட்ஜெட்டின் பல்வேறு அம்சங்கள் அரசாங்கமானது அடிப்படை வசதிகள் மற்றும் சமூகப் பாதுகாப்பை அடித்தட்டு மக்களுக்கு வழங்கும் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதையே அல்லது அதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதையே காட்டுகின்றது. இப்போதைய பொருளாதார சுழற்சியானது பெண்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்வதன் மூலம் அதிக வேலை செய்துவிட்டு குறைவாக சாப்பிடுவதையே செய்யுமாறு உறுதி அளிக்கிறது. இந்த பட்ஜெட் இப்படி இருக்கின்ற சூழ்நிலையை மேலும் தீவிரமாக்கத்தான் நிச்சயம் செய்திடும் என்று இந்திய ஜனநாயக மாதர் சங்க அறிக்கை ஒன்று கூறுகின்றது.

**ஆதாரம்:** *The Hindu* 18.3.2012

# யார் கொன்றது குழந்தை ஃபாலக்கை?

– பராக் நக்வி

ஒரு இரண்டு வயது குழந்தை கொடூரமாக சாவை சந்தித்தது. அந்தக் குழந்தை உயிரோடு இருப்பதற்கு போதுமான அளவு அக்கறை செலுத்தக்கூடியதாக நமது சமூக அமைப்பு இல்லாமல் இருப்பதே அவளது சாவுக்கு காரணம்.

ஒரு குழந்தை இறந்துவிட்டது. நாமெல்லாரும் அதற்காக வருந்துகிறோம். அவளுக்கு வெறும் இரண்டு வயதுதான். அவள் வீரத்துடன் போராடினாள். ஆனால், AIIMs மருத்துவமனையின் அவசரப்பிரிவில் அவளது உயிருக்கு பாதுகாப்பாக பொருத்தியிருந்த வயர்களும் டியூபுகளும் நமது சமூகத்தின் அமைப்புரீதியான தோல்விகளுக்குப் பொருத்தமாக இல்லை. அந்தத் தோல்விகளே அந்தக் குழந்தையை மரணத்துக்குக் கொண்டு சென்றன. பாலக் ஒருபோதும் உண்மையில் ஒரு மாறுதலாக நிற்கவில்லை என்பதே உண்மை.

பாலக்கின் வாழ்க்கையை பற்றி நாம் தெரிந்து வைத்து இருப்பது எல்லாம் ஊடகங்களில் கொஞ்சம் கொஞ்சமாக வந்த செய்திகள் தான். ஒரு 15 வயது சிறுமி பெயர் தெரியாத ஒரு குழந்தையைக் கொண்டு வந்தாள். அந்தக் குழந்தையின் உடம்பில் யாரோ (மனிதர்) கடித்த அடையாளங்கள் இருந்தது. அது ஏறத்தாழ செத்துபோகும் அளவு கடிக்கப்பட்டு இருந்தது.

அந்த 15 வயது பெண் அதன் அம்மா இல்லை என கதை மாறியது. அந்த பெண்ணும் கூட அவளோடு இருந்தவனால் சுரண்டப்பட்டவள்.அவன்தான் அந்த குழந்தையை அவளிடம் திணித்துள்ளான். கொஞ்ச நாட்களுக்கு பிறகு குழந்தையின் உண்மையான அம்மா யார் என்றுத் தெரியவந்தது. அவள் பெயர் முன்னா. 22வயதான அவள் பீகாரிலிருந்து டெல்லி வரை பல மாநிலங்கள் வழியாக கடத்தப்பட்டவள். ராஜஸ்தானை சேர்ந்த ஜுன்ஜுனு எனுமிடத்தில் இரண்டாம் திருமணத்துக்காக விற்கப்பட்டவள். அவளது மூன்று குழந்தைகளையும் தெரியாத ஆட்களிடம் விடுகிற நிலைக்கு தள்ளப்பட்டவள். குழந்தைகளை பார்த்துக்கொள்வதாக உறுதி சொன்னவர்கள் அதை காப்பாற்றவில்லை. இந்தக் கதையில் பல ஆட்களின் பெயர்கள் வந்து போகின்றன.பீகாரை சேர்ந்த ஷாஹுசைன் (முன்னியை விற்ற அவளின் கணவன்),சந்தீப் பாந்தே (அந்த 15 வயது பெண்ணின் சினேகிதி பூஜாவின் கணவன் முன்னியை கற்பழித்தவன்,அதன்பிறகு உத்தரபிரதேசத்தை சேர்ந்த கிழவனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கும் பெயரில் விற்க முயன்றவன், அதன்பிறகு ஒரு டாக்சி டிரைவரிடம் தள்ளி விட்டவன்), டாக்சி டிரைவர் ராஜ்குமார்( அந்த 15 வயது பெண்ணின் தற்போதைய பங்காளியும் விபச்சார புரோக்கருமானவன்), ஜிதேந்திர குப்தா (15 வயது பெண்ணின் அப்பன்.அவளை அடித்து விரட்டியவன். இத்தகைய விபச்சார புரோக்கர்களிடம் மாட்டிக்கொண்டு சீரழிய காரணமாயிருந்தவன்.) வேறு சில தகவல்களும் உண்டு. பாட்னாவில் கைது செய்யப்பட்ட மனோஜ்மற்றும் அவனது மனைவி ப்ரதிமா. அவர்கள் தான் ராஜ்குமாரிடமும் அந்த 15 வயது பெண்ணிடமும் குழந்தையை ஒப்படைத்தவர்கள். இவையெல்லாம் கடைசியாக குழந்தை பாலக்கின் சாவுக்கு காரணமானது.

### குழப்பும் மனிதப் புள்ளிகள்

குழப்பமான இந்த மனித புள்ளிகள் உண்மையில் எப்படி இணைகின்றன ? நம்மால் ஒருபோதும் தெரிந்து கொள்ள முடியாதபடி எவ்வளவோ இருக்கலாம்.நமக்கு தெரிந்தது எல்லாம் ஆதரவற்ற கதியில்லாத, வன்முறையால் பாதிக்கப்பட்ட முன்னி மற்றும் அந்த 15 வயது பெண்ணின் வாழ்க்கை யாருக்கும் தெரியாமல் கடந்து செல்கின்றன, மற்றும் ஒரு சின்ன பெண்குழந்தை தனது ஆதரவற்ற, கடத்தப்பட்ட அம்மாவின் தோள்களில் இருந்து பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட, சித்ரவதை செய்யப்பட்ட, கவலையோடு இருக்கிற ஒரு 15 வயது பெண்ணிடம் போய் சேர்கிறது என்பதுதான்.

இவை சின்ன துண்டுகளாக உடைந்த கண்ணாடியின் லட்சக்கணக்கான சிதறல்களை போன்றவை.இவற்றை ஒட்டவைத்தால் அவை அசிங்கமான கண்ணாடியாக இருக்கும். மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஆதரவற்றவர்களுக்கு எந்த சமூக பாதுகாப்பு கட்டமைப்புகளும் இல்லாத அல்லது அரசே இல்லாத நாடாக நாம் இருப்பதை அந்த கண்ணாடி காட்டும். பாலக்கும், முன்னியும், பெயரில்லாத அந்த 15 வயது சிறுமியும் நமது சமூக அமைப்பின் வெடிப்புகளின் வழியாக இருந்து, தானே வந்து விழுபவர்கள். அவர்களது வாழ்க்கை ஆயிரம் கதைகளைச் சொல்லும்.

இந்தியாவின் பெண்குழந்தைகள் பிறக்கும் போதே தேவையில்லாமல் பிறக்கிறார்கள். ஆறுவயதுக்குட்பட்ட பெண்குழந்தைகள் சதவீதம் 1991 ல் 1000 ஆண்குழந்தைகளுக்கு 945 ஆகவும் 2001ல் 927 ஆகவும் 2011 கணக்கெடுப்பில் சுதந்திர இந்தியாவில் இதற்கு

முன்பாக இல்லாத குறைந்த அளவாக 914 ஆக மாறி உள்ளது. பாலக் ஒருவேளை அதுபோன்ற தேவையற்ற, மதிக்கப்படாத எளிதாக வீசி எறியக்கூடிய குழந்தையாக இருக்கலாம். அவள் பிழைத்து இருந்தால் இந்தியாவின் லட்சக்கணக்கான நோஞ்சான் குழந்தைகளில் ஒருவராக இருந்திருக்கலாம். இந்தியாவில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் வளர்ச்சி குன்றிபோயுள்ள 58.8 சதவீதத்திலோ, அல்லது எடை குறைவாக உள்ள 42.3 சதவீதத்திலோ ஒருவராக இருந்திருக்கலாம் (***The HUNGaMA report, Naandi Foundation, 2012***). பெண் குழந்தை என்ற முறையில் சத்துணவு இல்லாமல் இருத்தல் எனும் ஏணியில் கடைக்கோடியில் அவள் இருப்பாள்.இதையெல்லாம் மீறி அவளுக்கு வலு இருந்தால் பாலியல் சித்ரவதை செய்யப்படுவதற்காக அவள் பிழைத்திருக்க வேண்டும்.

பாலக்கை முதலில் அடித்து அப்புறம் அவளை மருத்துவமனையில் சேர்த்த அந்த 15 வயது சின்னப்பெண்ணைப் பற்றி என்ன சொல்வது? தலைநகரின் மையத்தில் இருக்கிற சங்கம் விகார் எனும் பகுதியைச் சேர்ந்தவள். அவளது அம்மா இறந்துவிட்டாள். அவளது அப்பா அவளை பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கி இருக்கிறான்.அதனால் பாதுகாப்புக்காக ஓடிய அவள் விபச்சார தரகர்களிடம் மாட்டிக் கொண்டுள்ளாள். அவர்கள் அவளை மீண்டும் மீண்டும் பாலியல் பலாத்காரம் செய்தார்கள்.விபச்சாரத்தில் ஈடுபடுத்தினார்கள். அந்த பயந்து போன பெண் இன்னமும் அவளுக்கு உதவக்கூடிய எந்த பாதுகாப்பு அமைப்புக்குள்ளும் போய்ச்சேரவில்லை. அவள் காவல் நிலையத்திற்கு சென்றிருக்க வேண்டுமா? அவளால் அதை செய்து இருக்க முடியுமா? பாலியல் பலாத்காரம் தினசரி நிகழ்வாக இருக்கிறது.அதற்கான நீதி கிடைப்பதற்கு கடினமானதாக இருக்கிறது. காவல் நிலையத்தில் புகார் தந்துவிட்டு அவள் எங்கே போவாள்? குடும்ப ஆதரவு இல்லாமல் அவளை யார் பாதுகாப்பார்கள்? அவள் எங்கு தங்குவாள்? பாலியல் வழக்குக்காக போராடுவதால் அவள் எப்படி வாழ்வாள்? முன்பும் ஆதரவு இல்லை, இப்போதும் இல்லை. இனியும் இல்லை. அவளுக்கு, நாம், பாலியல் பலாத்காரம் பற்றிய சட்டங்களையும்,பாலின பார்வையற்ற குற்றவியல் நீதித்துறை அமைப்பையும் தவிர எதையும் தரவில்லை.

பாலியல் பலாத்காரத்துக்கான தண்டனை அளிக்கப்பட்ட எண்ணிக்கைகளின் சதவீதம் 2003ல் 26.12 சதவீதமாக ஆக இருந்தது 2010ல் 26.5 ஆக லேசாக உயர்ந்து இருப்பதாக தேசிய குற்ற ஆவணங்களின் அமைப்பு (NCRB) வெளியிடும் புள்ளி விபரங்கள் இருந்தாலும் அவை திசைதிருப்பக்கூடியதாக உள்ளன. சட்டத்துக்கான செயல்பாட்டாளர்களை பொறுத்தவரை தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்புகள் மேல்முறையீடு போகும்போது தலைகீழாக போய்விடுகின்றன. தோராயமாக மதிப்பிட்டால் ஐந்து சதவீதம் பேர் தண்டிக்கப்படலாம்.இந்த சின்ன வயதில் குடிசைப்பகுதியில் இருந்து ஓடி வந்த ஒரு பெண் நீதிமன்றங்கள் மூலம் உதவி பெறும் வாய்ப்பு உள்ளதா? சாட்சியங்களின் விதிகள், விசாரணை தடைகள், பொறுப்பற்ற முரட்டுத்தனமான காவல்துறை, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவருக்கு சமூகம் மற்றும் பொதுமக்கள் ஆதரவு இல்லாத நிலை, ஏராளமான அவமதிப்புகள், இதையெல்லாம் எதிர்த்து அவள் நின்றாக வேண்டும்.

தன்னை பொய்சொல்பவள் மற்றும் திமிர்பிடித்தவள் என்று அழைக்கப்படுவதில் இருந்தோ அல்லது வீட்டுக்கு திருப்பி அனுப்பப்படாமல் இருப்பதற்கான, தப்பிப்பதற்காக அவள் இந்த சனியன் பிடித்த "நல்ல"வழியை செய்திருக்கிறாள். இந்த துன்பப்படுகிற கைவிடப்பட்ட சின்ன பொண்ணுக்கு அவள் தேடிக்கொண்ட வன்முறையான சித்ரவதையான உறவை விட உண்மையான மேம்பட்ட ஒரு வாய்ப்பை தர நாம் தவறிவிட்டோம் என்பதுதான் உண்மை. இன்று அவளுக்கு சிறைக்கம்பிகளுடன் கூடிய அறையை விட உளவியல் அக்கறையுடன் கூடிய ஒரு பாதுகாப்பு அனேகமாக தேவைப்படலாம். ஆனால் அதுவும் கூட அவளுக்கு நாம் நல்லதை வழங்கி விட்டோம் என சொல்ல முடியாது எனத் தோன்றுகிறது.

பாலக்கின் அம்மா முன்னி பீகாரில் இருந்து விற்கப்பட்டு டெல்லி மற்றும் ராஜஸ்தான் எல்லைகளுக்குள் கடத்தப்பட்டதாக தெரிகிறது.2009 ல் 2848 மனித கடத்தல்கள் நடந்துள்ளன.2010ல் 3422 ஆக உயர்ந்துள்ளது. 20.2 சதவீத உயர்வு (NCRB, 2010). நமது சீருடை அணிந்த மனிதர்கள் கடத்துபவர்களை தடுக்கவோ நிறுத்தவோ செய்யவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. தங்களின் புள்ளிவிபரங்களில் முன்னியையும் அவர்கள் சேர்த்துக்கொள்வார்கள். ஆனால் முன்னிக்கு நல்ல வாழ்க்கையை நம்மால் தரமுடியுமா? முன்னியை போன்ற பெண்களுக்கான மறுவாழ்வுதிட்டங்கள் எங்கே? கணவனால் விபச்சார தரகனுக்கு விற்கப்பட்டு அவனால் மறுபடியும் விற்கப்பட்டு இருப்பதால் முன்னிக்கு திரும்பி வருவதற்கு யார் இருக்கிறார்கள்? துன்பத்தில் உள்ள பெண்களுக்கு இந்தியாவில் நாம் வைத்துள்ள நாரி நிகேதன் ஷெல்டர்களின் கதியை பாருங்கள். பாலியல் சித்ரவதை என்பது விதிவிலக்காக இருப்பதை விட விதியாகவே இருக்கிறது. மத்திய அரசின் திட்டங்கள் ஸ்வதாரை மட்டும் கொண்டுள்ளன. தங்குமிடங்கள் இல்லாத நிலையில் நடக்கின்றன.

## இது ஒரு விதிவிலக்கான சம்பவம் அல்ல

முன்னிக்கோ, அந்த சின்ன பொண்ணுக்கோ நடந்த கொடுமை என்பது விதிவிலக்கான ஒரு சம்பவம் அல்ல. 15 வயதில் இருந்து 49 வயதுக்குட்பட்ட இந்திய பெண்களில் மூன்றில் ஒருவர் உடல்ரீதியான வன்முறைக்கு ஆளாகி உள்ளார் என்கிறது NFHS III (2007) ஆய்வு.பத்தில் ஒருவர் பாலியல் வன்முறைக்கு ஆளாகிஉள்ளார். திருமணமான பெண்களில் ஏறத்தாழ ஐந்தில் இருவர் உடல்ரீதியான மற்றும் பாலியல் வன்முறைக்கும் ஆளாகி உள்ளனர். திருமணமாகாத பெண்களில் 60 சதவீதமானவர்கள் 15 வயதில் இருந்தே பெற்றோர் அல்லது ஆசிரியர் ஆகியோரால் உடல்ரீதியான வன்முறைக்கு ஆளாகி உள்ளனர். பாலியல் சித்ரவதைக்குள்ளான பெண்களில் நான்கில் ஒருவர் அந்த வன்முறையை முடிவுக்கு கொண்டுவர ஒருபோதும் உதவியை தேடியதில்லை. மூன்றில் இரண்டு பேர் அதனை வெளியே யாரிடமும் சொன்னது கூட கிடையாது. பாதிக்கப்பட்ட பெண்கள் பெரும்பாலும் தங்களின் குடும்பத்துக்குள்ளே தான் உதவி தேடுகிறார்கள்.ரொம்ப கொஞ்சம் பேர்தான் அமைப்புரீதியான உதவிகளை தேடுகின்றனர். (*Quoted in Psychosocial Care for Women in Shelter Homes, UNODC & NIMHANS, 2011*)

குழந்தை பாலக்கை பொறுத்தவரை – குழந்தைகளுக்கு எதிரான வன்முறை இந்திய வீடுகளுக்குள் தினமும் பல மறைமுக வடிவங்களில் நடந்து வருகிறது. குழந்தை பாதுகாப்புக்கான முறையான புள்ளிவிபரங்கள், தகவல்கள், சேவைகள் இன்னமும் எளிதில் கிடைக்காதவைதான். குழந்தை உரிமைகளுக்கான தேசிய ஆணையம் ஒன்று மார்ச் 2007ல் அமைக்கப்பட்டது என்பது ஒரு ஆரம்பமே. இன்னும் ரொம்ப தூரம் போக வேண்டியுள்ளது. இடைப்பட்ட காலத்தில் இந்த குழந்தை கொடூரமான சாவை சந்தித்துள்ளது. அவள் இரண்டு வயதுதான்.நாம் போதுமான அளவு அக்கறை செலுத்தாததால் சரியான நேரத்தில் அக்கறை செலுத்தாததால் அவள் இறந்துள்ளாள். நிறைய விஷயங்களை அவள் அடையாளப்படுத்துகிறாள். ஆதரவற்ற பெண்களுக்கும் கொடுமைப்படுத்தலுக்கு ஆளாகி பலியான குழந்தைகளுக்குமான பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள ஒவ்வொரு ஓட்டையையும் நாம் அடைப்போம். அப்போதுதான் அவளது மரணம் வீணாக போகாது.

(இந்த கட்டுரையின் ஆசிரியர் எழுத்தாளர். செயல்பாட்டாளர் மற்றும் தேசிய ஆலோசனை கவுன்சிலின் உறுப்பினர். அவரை தொடர்பு கொள்ள: ***Email: farah.naqvi64@yahoo.com)***

**ஆதாரம்** : The Hindu (19.3.2012)

## அங்கன்வாடிகள் ஆய்வில் தகவல்

### குழந்தைகளுக்கான இணை உணவு 'கட்' பணியாளர்கள் சீருடை அணிவதில்லை

குழந்தைகளுக்கு இணை உணவு கொடுப்பதில்லை என்றும், பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள், அரசு வழங்கிய சீருடையை அணிவதில்லை என்றும், கடற்கரை கிராம அங்கன்வாடிகள் குறித்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தமிழ்நாடு கடற்கரை ஊராட்சிகள் வள மையம், விழுப்புரம், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள, 60 கடற்கரை கிராம அங்கன்வாடிகளின் நிலை குறித்து ஆய்வு நடத்தியது. இதன் ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சி, சென்னையில் நடந்தது. 'கிரை' அமைப்பின் நிறுவன மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஆய்வறிக்கையை வெளியிட்டார். அதன் விவரம் பல மையங்களில், சமையல் பாத்திரங்களும், குழந்தைகள் உணவருந்தும் தட்டுகளும் மோசமான நிலையில் இருக்கின்றன. சமையல் செய்ய, 36 இடங்களில் விறகையும், இரண்டு மையங்களில் மண்ணெண்ணையும் மற்றும் 22 இடங்களில் காஸ் சிலிண்டரையும் பயன்படுத்துகின்றனர். அரசு வழங்கும் சீருடைகளை, பணியாளர்கள் அணிவதில்லை என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில், 59 சதவீதம் பேரும், விழுப்புரம் மாவட்டத்தில், 14 சதவீதம் பேரும், திருவள்ளூர் மாவட்டத்தில், 62 சதவீதம் பேரும், சரியாக பணிக்கு வருவதில்லை. அங்கன்வாடி பணியாளர்களில், 86 சதவீதம் பேரும், உதவியாளர்களில், 88 சதவீதம் பேரும், அரசு வழங்கியுள்ள சீருடையை அணிவதில்லை. 26 சதவீத மையங்களில், குழந்தைகளுக்கு இணை உணவும் கொடுப்பதில்லை. அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகள் குறித்து, பெற்றோர் சரமாரியாக புகார்களை தெரிவித்துள்ளனர். 'காலை 8.30 மணிக்கு மையங்கள் திறக்கப்படுவதில்லை. மையங்களில், குழந்தைகளை தூங்க வைத்துவிடுகின்றனர். கர்ப்பிணி பெண்களுக்கு, உரிய சேவைகள் அளிக்கப்படுவதில்லை' என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறியுள்ளனர். 'ஆய்வறிக்கை விவரங்கள், சமூக நலத்துறை அதிகாரிகள் கவனத்திற்கு தெரிவிக்கப்படும்' என, ஆய்வு அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மையங்களில் உள்ள முக்கியக் குறைகள் குறித்த புள்ளிவிவரம்:

**ஆய்வு நடந்த மையங்கள் குறைகள் விவரம்**

| | |
|---|---|
| 53 மையங்கள் | சுற்றுச்சூழல் சரியில்லை / பாதுகாப்பில்லை |
| 25 மையங்கள் | புதர் காடாக உள்ளன |
| 11 மையங்கள் | நீர் நிலைகளுக்கு அருகில் உள்ளன |
| 39 மையங்கள் | சுற்றுச்சுவர் கிடையாது |
| 25 மையங்கள் | கட்டடங்கள் பழுதடைந்துள்ளன |
| 32 மையங்கள் | கழிப்பறை வசதிகள் கிடையாது |
| 37 மையங்கள் | குழந்தைகள் தூங்க பாய் இல்லை |

**ஆதாரம்:** தினமலர் (25.3.12)

# இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தின் (AIIMS) தீய அமைப்பு முறையை தற்கொலை வெளிக்கொணர்ந்திருக்கிறது

– R. ராமச்சந்திரன்

**புதுடில்லி:**

முதல் வருட MBBS மாணவரான அனில் குமார் மீனா ஒதுக்கீட்டின் அடிப்படையில் டில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் மன உளைச்சல் காரணமாக தற்கொலை செய்து கொண்டது ஆதிதிராவிடர் / பழங்குடி இன மாணவர்களின் துயரத்தை இந்தியாவின் முன்னோடி மருத்துவ கல்வி நிறுவனத்தில் மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறது.

முதலாண்டு மாணவர்களுக்கான துணைத் தேர்வுகளில் அனில் குமார் தோல்வி பெற்றிருக்கிறார். வழக்கமான தேர்வுகளில் தோல்வியுற்ற மாணவர்கள் இணைத் தேர்வுகள் எழுதுவார்கள். அவர் வழக்கமான தேர்வுகள் எழுத அமர முடியாமல் போனதற்குக் காரணம் அவரின் குறைவான வருகைப் பதிவாகும். இதில் அவர் தோல்வி பெறக் காரணம் அவரின் தொடர்புத் திறன் ஆங்கிலத்தில் குறைவாய் இருந்ததுதான். அந்த நிறுவனத்தில் வகுப்புகள் நடத்துவது மற்றும் தேர்வுயாவும் ஆங்கிலத்தில்தான் நடைபெறும் அனில்குமார் தன் நண்பர்களிடத்தில் தனக்கு ஆங்கிலத்தில் உள்ள குறைபாடு பற்றி, வகுப்பறையில் நடைபெறும் விரிவுரைகளை பின்பற்றுவதில் தனக்கு உள்ள சிரமங்களைப் பகிர்ந்து கொண்டு இருந்திருக்கிறார்கள்.

ராஜஸ்தானிலுள்ள பாரன் மாவட்டத்தில் சூரஜ்மால் என்னும் ஏழை விவசாயின் மகன் அனில் குமார். ஆங்கில அறிவுக் குறைபாடு ஒன்றைத் தவிர அவர் மிகவும் புத்திசாலி மாணவராகத்தான் விளங்கி வந்திருக்கிறார். உண்மையில் 2010ஆம் ஆண்டின் AIIMS நுழைவுத் தேர்வில் சிறப்பாக எழுதித் தேர்வு பெற்றுள்ளார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மூன்று பேர் குழுவான தோராட் குழுவினரின் அறிக்கை (2006) கண்டறிந்த "பழங்குடி மற்றும் பட்டியல் வகுப்பு மாணவர்களை பாரபட்சமாக நடத்துகின்ற AIIMS நிறுவனம் பற்றிய விவரங்களின் பின்னணியை மீண்டும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது. அதன் விளைவு இங்ஙனம் நேரடியாய் ஒரு மாணவன் தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு சென்றிருக்கின்றது. அந்த அறிக்கை மே மாதம் 2007ம் வருடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு எந்தவிதமான முன் முயற்சிகளும் பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எந்தக் கல்வி நிறுவனங்களிலும் பட்டியல் இனம் / பழங்குடி மாணவர்களுக்குத் தேவையான இதுபோல ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். ஆனால், இங்கு (AIIMs) இல்லை என்று 84 சதவீத பட்டியல் இன பழங்குடி மாணவர்கள் கூறியதாக குழு அறிக்கை கூறுகிறது. "எல்லா மாணவர்கள் என்றில்லை என்றாலும் பெரும்பாலான மாணவர்கள் அதிகப்படியாக கொடுக்கப்பட வேண்டிய பயிற்சி இன்மையால் கற்பதில் அவதிப்படுவதாகவும் தேர்வுகள் மற்றும் வகுப்புகளை பூர்த்தி செய்வதில் சிரமப்படுகின்றனர்" என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

AIIMS–ஐ பொருத்தவரை அது போன்றதொரு திட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லை என்றே அக்கல்வி நிறுவனத்தினர் கூறுகின்றனர். அந்நிறுவனத்தில் பின்பற்றப்படும் தேர்வு முறையே அனில் குமாரின் இந்த சோக முடிவுக்கு காரணமாயிருந்திருக்க வேண்டும் என்று தெளிவாக நம்புவதற்கு இடமளிக்கிறது. இங்கு தேர்வுகளில் இரண்டு வகையான நடைமுறை பின்பற்றப்படுகின்றது. ஒன்று மாணவர் எழுதும் வெளிப்புற தேர்வு மற்றொன்று உள்முக தேர்வு அல்லது ஆசிரியர்கள் அளிக்கும் மதிப்பெண் இந்த இருவகைத் தேர்வுகளிலும் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் மதிப்பெண்கள் ஐம்பது சதவீதம் ஆகும். தோரட் குழு (Throt Committee) குறிப்பிடுவது என்னவென்றால் இந்த 50

சதவீத மதிப்பெண் முறையாக ஆசிரியர் தன் பங்கை சரியாகப் பயன்படுத்தாமல் மாணவர்களை தண்டிக்க தவறாகப் பயன்படுத்த வழி செய்து கொடுத்துவிடும் என்று கூறுகின்றது. இப்படி இருக்கும்போது இணைத் தேர்வு எழுதுகின்ற சூழ்நிலையில் ஆசிரியர் மதிப்பெண் 25% எழுத்துத் தேர்வு 75% என்ற அளவில் மதிப்பெண் வழங்கப்படும். ஆனால், மிகச் சமீபத்தில் ஆசிரியர் தரும் மதிப்பெண் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது. வழக்கமான தேர்வுகளைப் போல இந்த அமைப்பு முறை மாற்றமே

## SC/ST மாணவர்களின் பிரச்சனைகளை கவனிக்காத நிர்வாகம்:

**புதுடில்லி:**

ஒதுக்கீடு அடிப்படையில் சேர்ந்து பட்ட படிப்பு படித்து வந்த முதலாம் ஆண்டு மாணவரின் தற்கொலை அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனத்தில் (AIIMs) மார்ச் 3ம் தேதி நடந்திருப்பது அந்நிறுவனங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கு பொதுக்குழு மற்றும் நிர்வாகக்குழு எப்படி SC/ST மாணவர்களை கவனிக்காமல் இருந்திருக்கிறது என்பதையும் அரசியல் தலைவர்கள் எப்படி நிர்வாகத் தலைவர்களாக இருந்து எதையும் உணர்ந்து கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள் என்பதையும் யோசிக்க வைக்கின்றது.

**மத்திய நலவாழ்வுத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாது**

பொதுக் குழுவின் தலைவர் மற்றும் நிர்வாகக் குழுவின் தலைவரும் ஆவர். அவர் மட்டுமல்லாது பொதுக் குழுவில் மூன்று அரசியல் சார்ந்த அங்கத்தினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுமாவர். அவர்கள் ஆர்.கே. தாவன், சுஸ்மா சுவராஜ்மற்றும் ஜோதி மிர்தா. நிர்வாகக் குழுவில் உள்ள அரசியல் சார்ந்த அங்கத்தினர்கள். சுஸ்மா சுவராஜ்மற்றும் மோதிலால் வோரா ஆவர். இதே மார்ச் 3ம்தேதி 2010ல் டாக்டர் பாலமுகுந்த் பாரதி என்ற தங்கிப் பணிபுரிந்த தலித் மருத்துவர் ஜாதிப் பாகுபாடு மற்றும் பிரிவினை காட்டிய மேலாளரான மருத்துவர் மற்றும் பேராசிரியர்களின் போக்கினால் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

**NCSC அறிக்கை:**

2008ம் ஆண்டு பட்டியல் இனத்தவருக்கான தேசியக் கமிசன் (NCSC) ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அவ்வறிக்கையில் எங்ஙனம் சாதிப் பாகுபாடு AIIஆள நிறுவனத்தில் கையாளப்பட்டு கொடுமைகள் நிகழ்வதையும் குறிப்பிட்டு அவைகளை களைவதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் சிபாரிசு செய்திருந்தது. குறிப்பாக இந்தக் கமிசன் கூறியது என்னவென்றால், எந்த ஒரு நபரும் அல்லது நபர்களும் ஒதுக்கீட்டுக்கு எதிரான விதத்தில் செயல்பட்டால் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தண்டனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தோரா குழு கண்டறிந்த விசயங்கள் குறித்து தூண்டிவிடுதல் மற்றும் பழிவாங்கும் எண்ணத்தில் SC/ST மாணவர்களை பயன்படுத்தினால் கண்டிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்து உள்ளது.

கமிசன் பரிந்துரைத்ததின் அடிப்படையிலும் AIIஆள–ன் அறிக்கையோடு (என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது) என்பது பற்றி பாராளுமன்றத்தில் பட்டியலிட்டுக் காட்ட வேண்டும் என்று நலத்துறை அமைச்சகத்தால் AIIMs–ஐ கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. ஒதுக்கீடு அடிப்படையிலான தகவல் ஒன்றை எல்லா ஆசிரியர்களிடம் தரப்பட்டதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்ற தகவல் மட்டும் கிட்டியதாக சொல்லப்படுகின்றது. ஜனவரி 16ம் தேதி நிறுவனத்தில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை பற்றி விவாதம் எழுந்தபோது அது சம்மந்தமான எல்லாமும் முடிவு பெற்றுவிட்டதாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத் தீர்மான அறிக்கைப்பற்றி ‘இந்து பத்திரிகைக்கு பதில் உரை நிர்வாகம் மற்றும் பொதுக்குழுவின் தலைவர் கூறியதென்னவென்றால் பொதுக்குழுவில் அதுபற்றிப் பேசி முடிவு எடுத்தாகிவிட்டது என்றார். அமைச்சர் மேலும் கூறியதென்னவெனில் நிறுவனத்தில் நேர்ந்த அமைதியின்மை சரியாகிவிட்டதென்றும் யார் யார் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததோ அவர்கள் எல்லாம் அங்கிருந்து வெளியே சென்றுவிட்டார்கள் அல்லது பணி ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார்கள். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சாத்தியமில்லை என்று கூறினார்.

இதே கருத்துதான் சுஸ்மா சுவராஜ்அவர்களால் கூறப்பட்டது. (இவர் பொதுக்குழு உறுப்பினருமாவார்). நிகழ்ச்சி நடந்தபோது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு ஆர்.சி. டேக்கா இயக்குநராகப் பொறுப்பேற்றுக் கொண்டபின் எல்லா சுமுகமாகத்தான் போய் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால் அது அமைதியை குலைக்கும் தொந்தரவாகத்தான் மாறிவிடும் என்றும் கூறினார். இதில் சுவாரஸ்யமானதொரு விசயம் என்னவென்றால் அரசியல் சார்ந்த அங்கத்தினர்களிடமிருந்து மட்டுமல்ல வேறு எந்தப் பிரதிநிதித்துவ அங்கத்தினர்களிடமிருந்தும் எந்தவித மாற்றுக் கருத்தும் சொல்லப்படவில்லை என்பதுதான். பொதுக்குழு கூட்டத் தலைவரும் இதையே சொல்கிறார். அது என்னவென்றால் ஒரு கமிட்டி ஒன்று SC/ST மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை களைவதற்காக ஏற்படுத்தப்படும் என்பதுதான். இந்த சிபாரிசு 2007ல் தயாரான தோரா குழு அறிக்கையிலும் சொல்லப்பட்டிருந்தது என்பதைக் கவனிக்க வேண்டும்.

அனில்குமார் விசயத்தில் அவருக்கு எதிராய் பயன்படுத்தப்பட்டுவிட்டது. வழக்கம் போல தேர்வு எழுத முடியாமல் வாய்ப்பு இழந்த நிலையில் (குறைவான வருகைப்பதிவு காரணமாக) இந்த இணைத் தேர்வு ஒன்றை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிர்பந்தம் ஆகிவிட்டது அனில்குமாருக்கு. அதிலும் ஆசிரியர் தரும் மதிப்பெண் குறைந்துவிடும் நிலையில் அவர் வெற்றி வாய்ப்பை இழக்க வேண்டியதாகிவிட்டது.

கொள்கை அளவில் பார்க்கும்போது தோரா குழு அறிக்கை கூறுவதைப் போல ஆசிரியர் தரும் மதிப்பெண் என்பது ஒரு மாணவரை ஆதரித்து ஊக்கமளித்து கைதூக்கிவிடும் ஓர் அருமையான வழிமுறை ஆகும். ஒரு மாணவரை அது ஆணோ பெண்ணோ யாராகிலும் அவர்தம் உள்ளார்ந்த திறமையை வெளிக்கொணர பயன்பட வேண்டிய திறமை வெளிப்பாடாகும். அதுவே ஒரு கற்பித்தலில் பாரபட்சம், செயல்முறை தேர்வுகளில் ஆசிரியர் தம் கை வரிசையைக் காட்டப் பயன்படுத்தும் ஆயுதமாக மாறிவிட வாய்ப்புண்டு.

பட்டியல் இனம் மற்றும் பழங்குடி இன மாணவர்கள் கூறியது போல மற்றும் அறிக்கை கண்டறிந்ததுபோல மற்ற மாணவர்களுக்கு கிடைத்த ஆதரவு ஆசிரியர்களிடமிருந்து இவர்களுக்கு கிடைக்கவில்லை என்பது தெரிகிறது. “இப்படி மாணவர்கள் கற்பித்தல் மற்றும் அறிவு வளர்த்துக்கொள்ளுதலில் ஆசிரியர்களை சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையில் பட்டியல் இன மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஆசிரியர் ஆதரவு கிடைக்காமல் போகும் போது அது அவர்களின் தேர்வு எழுதும் திறமையை பாதித்து விடுவதோடு மன அழுத்தத்தை தரும் பிரச்சனையாக மாறிவிடுகின்றது” என்று குழு அறிக்கை தெளிவாகக் கூறுகின்றது. “பாரபட்சம் காட்டுவது என்பது மாணவர்களை நெருங்காமல் தவிர்த்துவிடுவது, கண்டிப்பது, மாணவர்களுக்கு ஒத்துழைப்புத் தர மறுப்பது, ஊக்கப்படுத்தாமல் சிறுமைப்படுத்தி பேசுவது போல பல படிவங்களில் மாணவர்களிடம் ஆசிரியர்கள் நடந்து கொள்வர்” என்று மாணவர்கள் கூறியதாக குழு அறிக்கை கூறியிருக்கிறது.

அந்த அறிக்கை வேறு ஒன்றையும் கண்டறிந்து வெளிப்படுத்தியிருப்பது என்னவென்றால் பட்டியல் இன மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு என சிறப்பு வழிகாட்டும் அமைப்பு ஒன்று ஏற்படுத்தி அவர்களை கவனித்திருக்க வேண்டும். அதில் அம்மாணவர்களின் பிரச்சனைகளான (கல்வி சம்பந்தபட்ட, நிதி சம்மந்தப்பட்ட மற்றும் மொழி சம்மந்தப்பட்ட) எல்லாவற்றுக்கும் வழிகாட்டுதல் செய்திருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள பிரச்சனை தீர்ப்பாயம் எதுவும் அங்கு நிறுவப்பட்டிருக்கவில்லை என்று குழு அங்கத்தினர் ஒருவர் கருத்து தெரிவித்திருக்கிறார். தோரா கமிட்டி சிபாரிசு செய்திருந்த எந்தவொரு செயலும் அங்கு நடைமுறைப்படுத்தப்–பட்டிருக்கவில்லை. பிரச்சனை தீர்க்கும் அல்லது கூறும் அமைப்பு ஒன்று ஏற்படுத்தாத நிலையில் அனில்குமார் அந்நிறுவன இயக்குநரை சந்தித்து தன் பிரச்சனை பற்றிக் கூற மூன்று முறை முயற்சிக்கும் கூட அவரால் சந்திக்கவே முடியாமல் போய்விட்டிருக்கிறது.

**ஆதாரம்: *The Hindu* (6.3.12)**

## தலைமை ஆசிரியர் திட்டியதால் பள்ளி மாணவன் தற்கொலை

தஞ்சை மாவட்டம் கல்விராயன் பேட்டையைச் சேர்ந்த தெய்வராஜ் மகன் ரத்தினசபாபதி (14), குழிமாத்தூரில் உள்ள உறவினர் கதிர்வேல் வீட்டில் தங்கி, மணத்திடல் புனித தோமையர் உயர்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்தான்.

நேற்று முன்தினம் மாலை ரத்தினசபாபதி விஷம் குடித்து மயங்கி விழுந்தார். ஆபத்தான நிலையில் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று இறந்தார்.

இதுபற்றி நடுக்காவேரி போலீசில் தெய்வராஜ்புகார் செய்தார். அதில் ’தனது மகன் ரத்தனிசபாபதி மதிப்பெண் குறைவாக எடுத்துள்ளதாக பள்ளி தலைமை ஆசிரியர் ஜான் கென்னடி திட்டி, அடித்துள்ளார்.

இதனால் மனமுடைந்து விஷம் குடித்து ரத்தினசபாபதி இறந்துவிட்டான். தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று தெரிவித்திருந்தார். இதுபற்றி போலீசார் வழக்குப்பதிந்து தலைமை ஆசிரியரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**ஆதாரம்:** தினகரன் (9.3.2012)

# பள்ளிக் குழந்தைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

ஐந்தாம் வகுப்பு வரையிலான குழந்தைகள், பள்ளி நேரங்களில், வளாகத்தைவிட்டு வெளியே செல்ல தடை விதிக்கவும், சுகாதார மற்ற தின்பண்டங்களை பள்ளி அருகில் விற்பனை செய்ய தடை விதிக்கவும், அரசுக்கு, சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

**ராட்டினம் ஆடியதால் ஏற்பட்ட வினை**

நாகை மாவட்டம் குத்தாலத்தில், கணபதி தேசிய நடுநிலைப் பள்ளி உள்ளது. இப்பள்ளியில், முத்துலட்சுமி என்ற மாணவி ஐந்தாம் வகுப்பு படித்தார். மதிய உணவை பள்ளியில் சாப்பிடுவார். மதிய உணவு இடை வேளையின் போது, பள்ளிக்கு வெளியில், ராட்டினம் ஆடுவதற்கு சில மாணவியர் சென்றனர். அப்போது, முத்துலட்சுமியும் அவர்களுடன் சென்றார். ராட்டினம் ஆடும்போது, முத்துலட்சுமிக்கு வலுது கையில் பலத்த காயம் ஏற்பட்டது.

**கை துண்டானது**

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மாணவியின் வலது கையைத் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 2003ம் ஆண்டு, டிசம்பர், 22ம் தேதி, இந்த விபத்து சம்பவம் நடந்தது. சம்பவம் தொடர்பாக, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

**'ஆசிரியர்கள் தடுக்காதது ஏன் ?'**

உரிய நஷ்ட ஈடு வழங்கக் கோரி, அரசுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டன. எந்த பலனும் இல்லை. இதையடுத்து, ஐந்து லட்ச ரூபாய் நஷ்டஈடு வழங்க அரசுக்கு உத்தரவிடக்கோரி, ஐகோர்ட்டில் மாணவியின் தந்தை வெள்ளிமலை என்பவர், மனு தாக்கல் செய்தார். மனுவில், 'மதிய உணவு வேளையின்போது, பள்ளி வளாகத்தை விட்டு மாணவியர் வெளியே செல்வதை ஆசிரியர்களோ, சத்துணவு அமைப்பாளர்களோ தடுக்கவில்லை' என கூறப்பட்டுள்ளது. இம்மனுவை, நீதிபதி பாஷா விசாரித்தார். மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் எம்.பாரி, அரசு தரப்பில் சிறப்பு அரசு பிளீடர் வேலுமணி ஆஜராகினர். நீதிபதி பாஷா பிறப்பித்த உத்தரவு: மதிய உணவு இடைவேளையின்போது, பள்ளி அருகில் ராட்டினம் விளையாடியதில் ஏற்பட்ட விபத்தில், வலது கையை மாணவி இழந்துள்ளார். இது ஒரு பரிதாபகரமான விஷயம். மதிய உணவு இடைவேளையில் இச்சம்பவம் நடந்துள்ளது. பள்ளி நேரங்களில் குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டிய கடமை, பள்ளி அதிகாரிகளுக்கு உள்ளது.

பள்ளியின் வெளியில் இச்சம்பவம் நடந்துள்ளதால், அதற்கு தாங்கள் பொறுப்பல்ல என, பள்ளி தரப்பில் கூறப்பட்டது. பள்ளி அருகில் சம்பவம் நடந்துள்ளது. பள்ளியில் இருந்து, 200 மீட்டர் தூரத்தில், தனியார் ஒருவர் ராட்டினம் நிறுவியுள்ளார். பள்ளி அதிகாரிகள், மதிய உணவு அமைப்பாளர்களின் அக்கறையின்மை, அஜாக்கிரதையால், சம்பவம் நடந்துள்ளது.
பள்ளி நேரத்தில் குழந்தைகளை வெளியில் அனுப்பியிருக்கக் கூடாது. பள்ளி அருகில் ராட்டினத்தை யாராவது நிறுவினால், அதுகுறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் கொடுத்திருக்க வேண்டும். இந்த வழக்கைப் பொறுத்தவரை, அரசும், பள்ளி நிர்வாகமும், மாணவிக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்.

எனவே, மூன்று லட்ச ரூபாய் நஷ்ட ஈட்டை, 12 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டும். மூன்று லட்சத்தில் ஒன்றரை லட்சத்தை அரசும், மீதி ஒன்றரை லட்சத்தை பள்ளி நிர்வாகமும் வழங்க வேண்டும். 12 வாரங்களுக்குள் இதை வழங்க வேண்டும்.
குழந்தைகள் இந்த நாட்டின் சொத்து, எதிர்கால இந்தியாவை ஒளிரச் செய்பவர்கள். குழந்தைகளின் நலனை பாதுகாக்க வேண்டிய அக்கறை, அரசுக்கும், பள்ளி அதிகாரிகளுக்கும், ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது. விபத்துகள், குழந்தைகளின் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள், இவற்றை தடுக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரமான, ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இவ்வாறு நீதிபதி பாஷா உத்தரவிட்டு, அரசு பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பரிந்துரைத்தார்.

**சத்துணவு அமைப்பாளர்களே பொறுப்பு**

அரசு பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் என, நீதிபதி பரிந்துரைத்தவை:

- ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள், தனியார் பள்ளியானாலும், அரசுப் பள்ளியானாலும், அந்தக் குழந்தைகளை பள்ளி நேரங்களில், பள்ளி வளாகத்தைவிட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது. பெற்றோர், பாதுகாவலரின் முன் அனுமதி பெற்று அல்லது பள்ளி அதிகாரிகளின் முன் அனுமதி பெற்று, வெளியே செல்ல அனுமதிக்கலாம். இதனால், விபத்துகள், குழந்தைகள் கடத்தல் தடுக்கப்படும்.
- மதியஉணவு திட்டத்தை பின்பற்றும் பள்ளிகளில், மதிய உணவு வேளையின்போது, குழந்தைகளை பாதுகாக்கும் பொறுப்பு, அமைப்பாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கும் உள்ளது.
- ராட்டினம், பொழுதுபோக்கு கருவிகளை, பள்ளி அருகில் இயக்கும் தனியாரை தடுக்க வேண்டும்.
- பெரும்பாலும், சுகாதாரமற்ற, உடலுக்கு கேடு விளைவிக்கக் கூடிய வகையில், பள்ளிக்கு வெளியில், அருகில், தின்பண்டங்கள் விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டும்.

– **ஆதாரம்:** தினமலர் 6.3.2012

குழந்தைகள் பாதுகாப்பு

# நார்வே இருக்கட்டும் இந்தியாவில் நிலைமை என்ன?

– கீதா ராமசேஷன்

நார்வே நாட்டில் பணியாற்றும் இந்திய டாக்டர் தம்பதியினரின் 5 வயதுக்குட்பட்ட இரு குழந்தைகள் அந்நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு சேவை அமைப்பின் ஆலோசனையின் பேரில் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். இது இந்தியப் பெற்றோரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அயல் நாட்டுத் தூதரக வாயில்களில் அன்றாடம் காத்துக்கிடக்கிற, இந்தியாவிலிருந்து எப்படியாவது வெளியேறிவிடத் துடிக்கிற இந்தியக் குடிமக்கள் பலருக்கும் இச்செய்தி தலையில் விழுந்த பேரிடியாகிவிட்டது.

உலகின் பிறநாடுகளின் குழந்தைகள் எப்படி வளர்க்கப்படுகின்றன என்பது நார்வே நாட்டில் உள்ள குழந்தைகள் நல சேவை அமைப்பிற்குத் தெரியாமல் போய்விட்டது என்று கூட நாம் சொல்லலாம். ஆனால், குழந்தைகள் பாதுகாப்பு சம்மந்தமாக இந்தியாவில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைகள். அதற்கென உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகளின் செயல்முறை குறித்து மறு ஆய்வு செய்வதற்கான நல் வாய்ப்பாக இச்சம்பவத்தை நாம் எடுத்துக் கொள்வோம். குழந்தைகள் பாதுகாப்பு குறித்து இந்தியாவில் இப்போதுள்ள அமைப்பு முறை மிகுந்த இடையூறு செய்வதாக இருப்பதோடு இறுதியில் நீதியற்ற முறையில் ஏழைப் பெற்றோரையே குறி வைத்துத் தாக்குகிறது எனக் கருத வேண்டியிருக்கிறது.

நார்வே சம்பவத்தைத் தொடர்ந்து குழந்தைகள் பாதுகாப்பில் 'மிக அதிகமான அக்கறை' என்பதன் பொருள் என்ன என்ற விவாதம் எழுந்துள்ளது. குழந்தைகள் மீது 'அதிகமான அக்கறை' யாருக்கு இருக்கும்? குழந்தைகளின் பெற்றோருக்கா? அரசுக்கா? அல்லது அரசால் உருவாக்கப்பட்ட குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புக்கா? நார்வே குழந்தைகள் நலச் சேவை அமைப்பின் அறிக்கையைச் சுருக்கமாகப் பார்ப்போம். "நான்கு வயதுக் குழந்தைக்கு எனத் தனி அறை இல்லை. இரண்டு குழந்தைகளுக்குமே அவரவர் வயதுக்கேற்றவாறு விளையாட்டுச் சாமான்கள் கொடுக்கவில்லை. குழந்தைகளுக்கு அணிவிக்கப்படும் ஆடைகள் பொருத்தமாக இல்லாமல் பெரிதாக இருந்தன. குழந்தைகளுக்கு பெற்றோர் கையால் உணவு ஊட்டுகிறார்கள்". இதுதான் அந்த அறிக்கையின் சுருக்கம். உலகின் மற்ற பகுதிகளில் குழந்தைகளை எப்படி வளர்க்கிறார்கள் என நார்வே நாட்டில் உள்ளோர்க்குப் போதிய ஞானமில்லை என்று குழந்தைகளை அரசாங்கத்திடம் பறிகொடுத்த இந்தியப் பெற்றோர் குற்றம்சாட்டுகிறார்கள். அதிர்ஷ்ட வசமாக இப்போது அந்தப் பிரச்சனை தானாகவே ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால், இதன் மையமான பிரச்சனை என்னவென்றால் குழந்தையோடு பெற்றோருக்குள்ள 'உணர்வுபூர்வமான தொடர்பு' துண்டிக்கப்படுவது என்பதுதான். வழக்கமான மொழியில் சொன்னால் "பாசம்". ஆனால், இந்திய அதிகாரவர்க்கத்தின் பார்வையில் 'இதுவெல்லாம் ஒரு பிரச்சனையே இல்லை'. ஆனால், நார்வே போலவே, இங்கு, நம்மைச் சுற்றியும் தெளிவில்லாத சரியாக விளங்கிக்கொள்ள இயலாத சூழலில் பெற்றோரிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து வைக்கும் சம்பவங்கள் எதிர்காலத்தில் வரலாம். ஏன் இப்போதும் வந்துகொண்டுதான் இருக்கின்றன.

இந்தியாவில் இப்போது நடைமுறையில் இருக்கும் இந்து, முஸ்லிம், இன்னபிற தனி நபர் சட்டங்கள் ஒவ்வொன்றும், குழந்தையின் 'பாதுகாவலர்' என்பவருக்கு ஒன்றுக்கொன்று மாறுபட்ட வெவ்வேறு வகையில் "தகுதி"யை நிர்ணயம் செய்கின்றன. குழந்தைகளை யாருடைய பராமரிப்பில் விடுவது என்ற வழக்குகள் வரும்போதெல்லாம் நீதிமன்றங்கள் "சிறார்களின் நலன்" மற்றும் "அதிகமான அக்கறை யாருக்கு இருக்கும்" என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்கின்றன. ஆனால், இந்த அடிப்படை அளவு கோள்களை அவ்வப்போது ஒன்றுக்கொன்று மாற்றாகவும் நீதிமன்றங்கள் கையாள்கின்றன.

இந்திய இளஞ்சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டமானது. குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவை என்பதான வழக்குகளில் குழந்தைகள் மீது உயர்ந்தபட்ச அக்கறை தேவைப்படுகிற தருணங்களில் குழந்தைகளைப் பாதுகாக்க ஒரு அமைப்பு தேவை எனும் போதில் அரசு தலையிடலாம் என அனுமதியளிக்கிறது. எந்தெந்த நிலைமைகளில் அரசு தலைமையிடலாம் என வெவ்வேறு அளவு கோள்களை இந்தியச் சட்டம் வரையறுத்துள்ளது. இவற்றில் ஒன்று, பெற்றோர் ஒருவர் தனது குழந்தையைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கான தகுதி இல்லாத நிலையிலோ, அல்லது குறிப்பிட்ட குழந்தையைக் கட்டுப்படுத்த இயலாத

நிலையிலோ அந்தக் குறிப்பிட்ட குழந்தைக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவை தேவைப்படுகிறது. காவல்துறை அலுவலர், அரசு ஊழியர், சமூக சேவகர், பொதுத் தொண்டில் ஆர்வமுள்ள குடிமகன் அல்லது தன்னார்வ அமைப்பு இவர்களில் யாரேனும் ஒருவர் இச்சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் நலக் கமிட்டி (Child Welfare Committee) முன்பு அக்குழந்தையை ஆஜர்படுத்த வேண்டும். இந்தக் குழுவானது ஒரு சமூக சேவகரோ அல்லது குழந்தைகள் நல அலுவலரோ மிக விரைவாக விசாரணை செய்ய வேண்டி அக்குழந்தையை ஒரு குழந்தைகள் காப்பகத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவு இடும்.

அதீதமான பொதுத் தொண்டு உணர்வு மிக்க குடிமகன்கள் சிலரும் தன்னார்வ அமைப்புகள் பலவும் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பை அடிக்கடி அணுகி வழி மீறல்கள் பற்றி புகார் தெரிவித்து வருகின்றனர். இவர்களில் பலர் அக உணர்வு அடிப்படையிலும், தமக்கே இயல்பான வர்க்கப் பாகுபாட்டு உணர்வு அடிப்படையில் இப்புகார்களைத் தெரிவிக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. நீங்கள் சென்னையில் உள்ள குழந்தைகள் நலக் கமிட்டியின் வளாகத்திற்கு ஒரு முறைச் சென்று வந்தாலே இதுபற்றிய எல்லா உண்மைகளும் உங்களுக்கு விளங்கிவிடும். அந்த வளாகம் முழுவதுமே பீகார். ஜார்க்கன்ட், சத்தீஸ்கர் மற்றும் பிறமாநிலங்களிலிருந்து பிழைப்புக்காகப் புலம் பெயர்ந்து வந்துள்ள ஏழைமக்கள் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருப்பதைக் காணலாம். கால் வைக்க முடியாத நெருக்கடிக்கிடையிலும் ஒரு முறையேனும் தங்கள் பிள்ளைகளை பார்த்துவிட வேண்டும் என்று துடிப்பு அவர்களை ஒரு இடத்தில் உட்காரவிடாது துரத்திக்கொண்டிருக்கும். இவர்களின் குழந்தைகள் கழைக்கூத்தாடிகள், பிச்சைக்காரர்கள், அல்லது பெற்றோருடன் வேலை செய்கிறார்கள் என்பது போன்ற புகார்களின் பேரில் இங்கு கொண்டுவந்து அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சில குழந்தைகள் ரயில்வே போலீசாரால் பிடிக்கப்பட்டு இங்கு ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். ஏதேனும் ஒரு குழந்தை இந்த அமைப்புக்குள் சிக்க வைக்கப்பட்டு, சிறை வைக்கப்பட்டு விடுமானால், அதன் பெற்றோர் அக்குழந்தையை மீட்பதற்கு மிக நீண்ட நெடிய, கடினமான போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பல சமயங்களில் அக்குழந்தையின் பெற்றோர் தாம்தான் என்பதற்கு உரிய ஆவணங்கள், அடையாளங்களைச் சமர்பித்து மெய்ப்பிக்க இயலுவதில்லை. இந்தக் கமிட்டியின் முன்பாக கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளை ஒரு வழக்கு என்ற தன்மையில் கைக்கொள்ள முடியாது. இதனால் தங்கள் மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு புலம் பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட புலம் பெயர் தொழிலாளிகள் இதனால் இருமடங்கு பாகுபாட்டிற்கு ஆட்படுகின்றனர்.

இளஞ்சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் குழந்தைகள் நலக்கமிட்டிகள் தங்களது விசாரணை நடவடிக்கைகள் அனைத்தையும் நான்கு மாதங்களுக்குள் முடித்துவிட வேண்டுமென்பது வழி. ஆனால், விதிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் விசாரணை முற்றுப்பெறாது இழுத்துக்கொண்டே போவதென்பது நடைமுறையில் உள்ள பொதுவான நியதி. ஏனெனில், இந்தக் குழந்தையின் உண்மையான பெற்றோர் யார் என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்கோ அல்லது புலம் பெயர்ந்து வந்துள்ளோரின் சொந்த மாநிலங்களில் உள்ள இதேபோன்ற குழந்தைகள் நலக் கமிட்டிகளோடு தொடர்பு கொண்டு குழந்தை அல்லது அதன் பெற்றோர் குறித்த உண்மை விவரங்களை மெய்ப்பிக்கத் தக்க சான்றுகளைத் திரட்டுவதற்கோ அதன் மூலம் குழந்தையை அதன் சொந்த ஊருக்கு அனுப்பி வைப்பதற்கோ எவ்வித ஏற்பாடுகளும் இந்தக் குழந்தைகள் நலக் கமிட்டியிடம் இல்லை. பல மாநிலங்களில் இதுபோன்ற குழந்தைகள் நலக் கமிட்டிகள் என்ற ஒரு விசயமே இல்லை என்றாகிவிடுவதால் பிரச்சனை மென்மேலும் சிக்கலாகிப் போய்விடுகிறது. மாநிலங்களில் உள்ள குழந்தைகள் நலக் கமிட்டிகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாமை காரணமாக தேவையற்ற அளவுக்கதிகமான கால தாமதம் ஏற்படுகிறது.

விசாரணை நடவடிக்கைகள் முடிவிற்கும் இறுதி அறிக்கை அளிக்கப்படுவதற்கும் இடையிலான காலம் முழுவதும் அந்தக் குழந்தை இடநெருக்கடி மிகுந்த குழந்தைகள் காப்பகங்களிலேயே இருக்க வேண்டும். இது ஒரு இடைக்காலப் புகலிடமாகும். இங்கு அக்குழந்தை பாதுகாப்பான சூழலில் தங்க வைக்கப்படும். இது இடைக்காலதங்குமிடம் மட்டுமே என்பதால், இந்த காப்பகங்களில் குழந்தைகளுக்கு என வேறு எந்த ஏற்பாடுகளுமே இருப்பதில்லை. புலம் பெயர்ந்த குழந்தைகள் இங்குள்ள உணவை விரும்புவதில்லை. இங்கு பேசும் மொழியை அவை புரிந்துகொள்ள இயலவில்லை. ஒவ்வொரு குழந்தையின் பேச்சுமொழியும் வேறு வேறானது. இந்தி மொழி பேசத் தெரிந்தவர்கள் கூட இங்கு வரும் சில குழந்தைகளோடு கலந்து பேசி விவரங்களைக் கேட்டறிய இயலாது. சிறார் சட்டத்தின்படி, இக்குழந்தைகள் பற்றிய விசாரணை முடிந்த பின்னரும் கூட, இக்குழந்தைகளுக்கென்று குடும்பம் ஒன்று இல்லையென்றோ அல்லது உறுதியான ஆதரவு என்று எவரும் இல்லையென்றோ முடிவு செய்து இக்குழந்தை தக்க பாதுகாப்பு மற்றும் பராமரிப்புள்ள சூழலில் வைக்கப்பட வேண்டுமெனக் கருதுமானால்,

அக்குழந்தைக்கு 18 வயது நிறைவடையும் வரையில் அல்லது அக்குழந்தைக்கென தகுதியான மறுவாழ்வு உறுதி செய்யப்படும் காலம் வரையில் அக்குழந்தையை தொடர்ந்து குழந்தைகள் காப்பகம் அல்லது புகலிடத்தில் தங்கியிருக்க அனுமதி வழங்கும்.

ஒரு குழந்தையின் பெற்றோர் அக்குழந்தையை வளர்க்கத் தகுதியற்றவர்கள் என்றோ, அவர்கள் அக்குழந்தையை உறுதியாக ஆதரிக்க இயலாது என்றோ வேறு ஒருவர் எந்த வகையில் முடிவு செய்ய முடியும்? இச்சட்டத்தில் 'மிகச் சிறப்பான அக்கறை' என்பதற்கு அளிக்கப்பட்டுள்ள வரையறை மிகவும் சிக்கலாக உள்ளது. ஒரு குழந்தையானது, அதன் பெற்றோர் பாதுகாப்பில் தான் இருக்க வேண்டும். அதுதான் அக்குழந்தையின் முதல் தேவை. மேலும் ஏழ்மையான பெற்றோருக்குள்ள வசதிக்குறைபாடுகள், வருவாய் குறைபாடுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இந்த 'சிறப்பான அக்கறை' என்ற வரையறை இருக்க வேண்டும். பெற்றோரை விட்டுப்பிரிக்கப்பட்ட ஒரு குழந்தைக்கு அரசாங்கத்தால் எந்த வகையில் மறுவாழ்வு அளிக்க இயலும்? குழந்தைகளைச் சுரண்டிப் பிழைக்கும் பெற்றோர் சிலரின் செயலை நியாயப்படுத்துவதற்காக நாம் இந்தக் கேள்வியை எழுப்பவில்லை. ஏழ்மையானவர்கள் என்பதற்காக அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில், சட்டத்தை வடிவமைப்போருக்கு மக்களின் வறுமைக்கு முடிவுகட்ட வேண்டிய கட்டாயக் கடமையும் இருக்கிறது.

இந்தச் சட்டம் அதன் கட்டமைப்பு வகையில் ஏழைப் பெற்றோர் வாழ்வில் இடையூறு செய்வதாக இப்போது உள்ளது. நீதிமன்றத்தில் கதவுகளைத் தட்டி நியாயம் கேட்க இயலாத ஏழைமக்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்படும்போது இச்சட்டம் பயனற்ற ஒன்றாக ஆகிவிடுகிறது.

சிறு குழந்தைகளின் அந்தரங்கம் பாதிப்புக்கு ஆளாகுமென்பதால், குழந்தைகள் பற்றிய விசாரணையைப் பொது மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக நடத்துவதைத் தடை செய்யும் வகையில் இச்சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும், குழந்தைகளுக்கும் இச்சட்டத்திற்கும் உள்ள பொருத்தப் பாடுகள் குறித்து நாம் மிக ஆழமாக ஆய்வு செய்வது இச்சட்டத்தை நாம் புரிந்து கொள்வதற்கான அவசியத் தேவையாக உள்ளது.

**ஆதாரம்:** *The Hindu* 27.1.2012

## பள்ளியில் தண்டனை

பள்ளி மாணவர்களில் ஏறக்குறைய 99 சதவீதம் பேர், ஒன்றுமே தெரியாமல் நீயெல்லாம் படிக்க வந்துட்ட என்ற ரீதியில் ஆசிரியர்களிடம் திட்டுவாங்குகின்றனர் அல்லது பல்வேறு காரணங்களுக்காக அடிவாங்குகிறார்களாம். குாந்தைகள் உரிமை பாதுகாப்புக்கான தேசிய கமிஷன் நடத்திய ஆய்வில் இந்த அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது.

நாடுமுழுவதும் 9 மாநிலங்களில் 6,632 மாணவ, மாணவிகளிடம் ஆசிரியர்கள் அளிக்கும் தண்டனை குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இதில்வெறும் 7 மாணவர்கள் மட்டுமே தாங்கள் எந்தத்திட்டும், அடியும் வாங்கியதில்லை எனக் கூறியிருக்கிறார்கள். முதல் பெஞ்ச் மாணவர்களாக இருப்பார்கள் போல் தெரிகிறது. மற்றபடி 99.86 சதவீதம் பேர் திட்டுவாங்குவது, பிரம்பால் அடிவாங்குவது, கன்னத்தில் அறைவாங்குவது, காதைப் பிடித்து திருகுவது என பல்வேறுவகையான தண்டனைகளை அனுபவித்து வருகின்றனர். ஏறக்குறைய 81 சதவீத மாணவர்களை, நீயெல்லாம் படிக்கவேலாயக்கில்லாத ஆளப்பா.. எங்க உயிரவாங்குறதுக்குனேவந்துட்ட.. என்ற ரீதியில் ஆசிரியர்கள் திட்டியுள்ளனர். அது போல் ஏற்கனவே திட்டுவாங்கியவர்கள் பெரிய அளவில் சாதனை படைத்திருப்பது தனிக்கதை. சிலபள்ளிகளில் இருட்டு அறையில் போட்டுஅடைப்பதும், விசாரணைக் கைதிகளுக்குகொடுப்பதுபோல்ஷாக் ட்ரீட்மென்ட் கொடுப்பதும் நடக்கிறதாம். ஆசிரியரிடம் 75 சதவீதம் பேர் பிரம்படிவாங்கியிருக்கிறார்கள். 69 சதவீதம் பேர் கன்னத்தில்அறைவாங்கியிருக்கிறார்கள்.

முன்புபோல்வகுப்பறையில்குறைந்தஎண்ணிக்கையில்மாணவர்கள்இல்லை. 50 மாணவர்கள்வரைஉள்ளனர். அதற்கேற்ப, மக்குமாணவர்களும் அதிகம் உள்ளனர்.அத்தனைபேரும் நன்றாகப் படிக்கவேண்டும் எனபள்ளிநிர்வாகங்கள்ஆசிரியர்களுக்குநெருக்கடிகொடுக்கின்றனர். இதனால்ஏற்படும் பிரஷர், வகுப்பறையில் உட்காரகூட சீட் தராததனியார் பள்ளிநிர்வாகங்களின் கெடுபிடி, குறைந்தசம்பளம் என பல்வேறு பிரச்சனைகளால்ஆசிரியர்களும் மனஅழுத்தத்தில்உள்ளனர். அதுபோன்ற நேரங்களில் மாணவர்கள்செய்யும் சேட்டைகளை தாங்கமுடியாத ஆசிரியர்கள் தங்கள் கோபத்தை பிரம்படியாகவும் கன்னத்தில்அறையாகவும் வெளிப்படுத்துகின்றனர். அடியாதமாடுபடியாதுஎன்பதெல்லாம் இப்போது செல்லுபடியாகாது. மாணவர்களை அடித்தால்சிறைக்கு போகவேண்டியதுதான்.

ஆதாரம்: **தினமலர் 5.3.2012**

## சட்டம் அனுமதித்தாலும்

# பாதுகாப்பற்ற கருக்கலைப்பு அதிகரிப்பு

### *உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சி தகவல்*

இந்திய பெண்களில் 66 சதவீதம் பேர், கருக்கலைப்பு செய்வதில் பாதுகாப்பற்ற முறைகளை பின்பற்றி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளில் கருக்கலைப்பு செய்யும் பெண்கள் குறித்து நியூயார்க்கில் உள்ள 'கட்மச்சர்' என்ற ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து உலக சுகாதார நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது. அப்போது, தெற்காசியா மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள நாடுகளில் 2008–ம் ஆண்டு மட்டும் ஒரு கோடியே 5 லட்சம் பெண்கள் பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொண்டது தெரியவந்தது. அவர்களில், 65 லட்சம் பேர் இந்திய பெண்கள்.

- இந்தியாவில் 2003ம் ஆண்டு 4 கோடியே 16 லட்சம் பெண்கள் கருக்கலைப்பு செய்தனர். 2008ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 4 கோடியே 38 லட்சமாக அதிகரித்துள்ளது.
- பாதுகாப்பற்ற முறையிலான கருக்கலைப்பு சதவீதமும் 1995–ம் ஆண்டு 44 சதவீதமாக இருந்தது 2008ம் ஆண்டு 49 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- பிரசவ நேரத்தில் ஏற்படும் உயிரிழப்பில் 13 சதவீதம், பாதுகாப்பற்ற கருக்கலைப்பால் நிகழ்கிறது.

இந்தியாவில் கருக்கலைப்பு செய்து கொள்ள பாதுகாப்பான சட்டவிதிகள் உள்ளன. எனினும், 66 சதவீதம் பெண்கள், அதாவது மூன்றில் இரண்டு பெண்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு முறைகளிலேயே ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் ஆய்வறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில், வளர்ந்த நாடுகளில் கருக்கலைப்பு விகிதம் 6 லட்சம் வரை குறைந்துள்ள நிலையில், இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளில் 28 லட்சம்வரை அதிகரித்துள்ளது. இதுபோல, சர்வதேச ரீதியாக பாதுகாப்பற்ற வழிகளில் கருக்கலைப்பு செய்வதும் ஆண்டுதோறும் உயர்கிறது. 1995–ஆம் ஆண்டில் சராசரியாக 44 சதவீதமாக இருந்தது, 2008–ம் ஆண்டில் 49 சதவீதமாக உயர்ந்துள்ளது.

ஆண்டுதோறும் கருக்கலைப்பு செய்யும் பெண்களில் ஒரு லட்சம் பேருக்கு 200 பேர் மரணத்தைத் தழுவுகின்றனர் என்ற தகவலையும் உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது. எனவே, 'இந்தியாவின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை விரிவான அளவில் பிரச்சாரம் செய்வதும், பாதுகாப்பான கருக்கலைப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் உடனடி அவசியம்' என்று கட்மச்சர் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் கில்டா கூறியுள்ளார்.

**ஆதாரம் :** தினகரன் (21.1.2012)

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*